விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 17 வியாழக்கிழமை (03.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 319

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நாட்டை அழிக்கும் செயற்பாடுகளில் தப்பிச்சென்று வெளிநாடுகளில் வாழும் புலிகள்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் வாழும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து நாட்டை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். சில நாடுகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்து வருகின்றன.எனவே அனைவரும் பேதங்களை மறந்து நாட்டையும், நாட்டுத் தலைவரையும் பாதுகாக்க ஒன்றிணைய வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினர் லண்டனுக்கும் விஜயம்

(நியூயோர்க்)

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாளை மறுதினம் லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரியவருகிறது.

லண்டனுக்கு விஜயம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை விமான நிலையத்தில் வைத்து கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## கரந்தெனிய, அஹுங்கலயில் நேற்றிரவும் ஊடரங்கு

(காலி)

கரந்தெனிய மற்றும் அஹுங்கலபிரதேசங்களில்நேற்றும்பொலிஸ் ஊடரங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்றுமாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணிவரையில் ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் கலகங்கள் ஏற்படுவதனை தடுக்கும் நோக்கில் முன்னெச்சரிக்கையாக பொலிஸார் ஊரடங்கு உத்தரவினை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் நோக்கில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக (19ஆம் பக்கம் பார்க்க)

## துமிந்த சில்வாவுக்கு வெளிநாட்டில் சிகிச்சை

(கொழும்பு)

கொலன்னாவவில் கடந்த மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுசம்பவத்தில் படுகாயமடைந்த ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு அவுஸ்திரேலியாவில் சிகிச்சை வழங்குவதற்காக சிறி ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையிலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இதற்காக நேற்றுமுன்தினம் இரவு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் அம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலையிலிருந்து கொண்டு செல்லப் பட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு சிறப்பு விமானம் மூலம் செல்லும் இவருடன் (19ஆம் பக்கம் பார்க்க)

## போர்குற்ற விவகாரம் சுயாதீன விசாரணை தேவை

### கனடா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில்இடம்பெற்றபோரின் போது சர்வதேச மனிதாபி மான மற்றும் மனிதவுரிமைகள் சட்டங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என கனடா மீண்டும் வலியுறுத்தியுள் ளது.

கனடாவின் வெளிவிவகாரக் கொள்கை: ஜனநாயகம், சுதந்திரம், மனிதவுரிமைகள் மற்றும் நல்லாட்சி என்பதை கனடா தொடர்ந்தும் சர்வதேச அரங்கில் வலியுறுத்திவரும் நிலையில், இத்தகைய தன்மைகளை கடுமையாக (19ஆம் பக்கம் பார்க்க)


## சனல் 4 கொலைக்களம் தயாரித்தவர் கோழை

### ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் கணிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கொலைக்களம் சனல் 4 காணொளி ஆவணத்தைத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தயாரித்த அதன் பணிப்பாளரான மக்கலென்ரே ஒரு கோழை என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளரான பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட லைஸ்அக்ரீட் என்ற ஆவணக் காணொளியின் போதுதான் உட்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியா எமக்கு தோள் கொடுக்கும் தோழன்; கனடா என்ன? ஆஸி. கூட எம்மிடம் தோற்றுவிடும்

### கூறுபவர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களின் போதெல்லாம் எமக்கு இந்தியா தொடர்ந்து தோழமையுடன் உதவி வருகிறது. இந்நிலையில் கனடா என்ன? அவுஸ்திரேலியா கூட இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டாலும் அதில் வெற்றி பெறப் போவதில்லை.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய உறுப்பினரும், மின்சக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கிளாரி கிளின்டன் சந்திக்காமை மகிழ்ச்சியான வரவேற்கத்தக்க விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்ட சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டமை பொதுநலவாய அமைப்பிற்கு கரும்புள்ளி

### மனித உரிமை அமைப்புக்கள் விமர்சனம்

(கொழும்பு)

இலங்கைக்கு ஆதரவான பொதுநலவாய அமைப்பின்தீர்மானம் அவ் அமைப்பின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ஆட்சிக் கோட்பாடுகளுடன் முரண்பட்டுக் காணப்படுவதுடன் பொதுநலவாய அமைப்பின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாகும்.

இவ்வாறு மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் இராஜதந்திரிகளைச் சுட்டிக் காட்டி நியூசிலாந்து ஊடக மானஸ்கோப்தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை 2013ல் இலங்கையில் நடத்துவது தொடர்பான பொருத்தப்பாடுகளை மீள ஆராய்வதில்லை என அந்த அமைப்பு தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானமானது பொதுநலவாய அமைப்பின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ஆட்சிக் கோட்பாடுகளுடன் முரண்பட்டுக் காணப்படுவதுடன் அவ் அமைப்பின் வரலாற்றில் இத்தீர்மானமானது (19ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகளின் புனர்வாழ்விற்கு நோர்வே ரூ.72 மில்லியன் நிதியுதவி

(ஒஸ்லோ)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்விற்காக நோர்வே அரசாங்கம் நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

முன்னாள் போராளிகளை சமூகத்துடன் மீள இணைப்பதற்காக நோர்வே அரசாங்கம் 57 மில்லியன் ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளது. சர்வதேச குடிபெயர்தல் அமைப்பின் ஊடாக இந்தப் பணம் செலவிடப்பட உள்ளது.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ட்ஸ்டாட், சர்வதேச குடிபெயர்தல் அமைப்பின் தலைவர் ரிச்சட் டான்சிகர் ஆகியோருக்கிடையில் குறித்த திட்டம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட நோர்வே தூதுவர் ஹில்டே தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வலுப்படுத்த வேண்டியது (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 118 பல்கலை மாணவர்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்

வன்முறைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கடந்த சில மாதங்களில்118 பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் நேற்றுத் தெரிவித்துள்ளது. இச் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார இது தொடர்பாக தெரிவித்துள்ளதாவது;

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து 32 மாணவர்களும் களனி பல்கலைக்கழகத்திலிருந்து இருவரும் ரஜரட்ட பல்கலைக்கழகத்திலிருந்து 13 பேரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலிருந்து இருவரும் சுதேச மருத்துவ நிறுவகத்திலிருந்து இருவரும் றுகுணு பல்கலைக்கழகத்திலிருந்து மூவரும் புத்தர்ஸ்ரவக பிக்கு பல் கலைக் கழகத்திலிருந்து 56 பேரும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

• மாணவர்களின் உரிமைகளையும் மாற்று அரசியல் குரல்களையும் நசுக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் நிலையில் இம் மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சஞ்சீவ பண்டார கூறினார்.

இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சின் மாணவர்கள் விவகார பணிப்பாளர் நாயகம் கீர்த்தி மாவலகேயிடம் கேட்ட போது; வன்முறை குற்றச்சாட்டுகளின் காரணமாக இம்மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார். இம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் வன்முறைகளை தூண்டியதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு காலவரையறைகளுக்கு இம்மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். சிலர் 3 மாதங்களுக்கும் ஏனைய சிலர் ஒரு மாதத்திற்கும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (பா-9)

## விக்கிலீக்ஸ் ஸ்தாபகரை நாடு கடத்த உத்தரவு

விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ், பாலியல் வல்லுறவு வழக்கிற்காக பிரிட்டனிலிருந்து சுவீடனுக்கு நாடு கடத்தப்படுவதற்கு எதிராக தாக்கல் செய்த மனுவை லண்டன் உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

அவுஸ்திரேலிய பிரஜையான ஜூலியன் அசேஞ்சுக்கு எதிராக சுவீடனை சேர்ந்த பெண்கள் இருவர் சுமத்திய பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டுக்காக அவர் நாடுகடத்தப்பட வேண்டுமென சுவீடன் அதிகாரிகள் கோரியிருந்தனர்

நேற்றைய தீர்ப்பின்படி 10 தினங்களுக்குள் அவர் சுவீடனுக்கு நாடு கடத்தப்படும் நிலையை எதிர் நோக்குகிறார். எனினும் இது தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கு அவருக்கு 14 நாள் அவகாசம் உள்ளது. (பா-9)


**கடை வாடகைக்கு உண்டு**

கொழும்புத்துறை வீதியில் கணக்கர் சந்திக்கு அருகாமையில் உள்ள மூன்று கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு
0750403027
(6709)

**வீடு விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை
சம்பந்தர் வீதியில்
சகல வசதிகளுடனும்
சுற்றிவர மதிலுடன்
4 1/2 பரப்பு காணியில்
அழகிய வீடு
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775599281
(சி-4893)

**45-ம் நாள் நினைவஞ்சலி**

**கிருஷ்ணர் வல்லிபுரம்**

பிறப்பு 1942.04.18 இறப்பு 2011.09.18



எண்ணியே ஏங்குகின்றோம் என்றுமே நாம்
கண்ணீரில் மூழ்கிக் கலங்குகின்றோம் நீ
விண்ணுக்குச் செல்ல காலன் ரயிலில் வந்தானோ
மண்ணில் வாழ மறுபடியும் நீ வாராயோ



அமரர் கிருஷ்ணர் வல்லிபுரம் அவர்களின் 45-ம் நாள் நினைவு தின கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (03.11.2011) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

165/1, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
(சி-4894)

**அந்தியேட்டி அழைப்பு**



கடந்த 04.10.2011 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்
**உலகநாதன் நவமணி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.11.2011) வியாழக்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

186/11, குருநாதர் சுவாமி கோவில் வீதி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4892)


# வெளிநாடுகளுடன் பேசுவதால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது

## அமைச்சர் பீரிஸ் கருத்து

தேசிய பிரச்சினைக்கான தீர்வு நாட்டுக்குள்ளேயே உள்ளது. இங்கிருந்தே அதற்கான தீர்வை எட்ட முடியும். வெளிநாட்டு அரசாங்கங்களுடன் பேசுவதனால் தீர்வு காண முடியாது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் மற்றும் ஐ.நா.செயலாளருடன் சந்திப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; ஐ.நா முறையை இலங்கை எதிர்க்கவில்லை. யாரை வேண்டுமானாலும் அவர்கள் சந்திக்கலாம்.

இலங்கையில் பல அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றில் சில நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

ஆகவே இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் தமிழ்தேசியக் கூட்டமைப்பே என்றும் தமிழ் மக்களின் கருத்தை அவர்கள் பிரதிபலிப்பதாகவும் கரு துவது அடிப்படையில் தவறான நம்பிக்கையாகும்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு அமெரிக்க பயணம் குறித்து இலங்கை அரசிற்கு தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

தேசிய பிரச்சினை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி வருகிறது.

தேசிய பிரச்சினைக்கான தீர்வு நாட்டுக்குள்ளே உள்ளது. இங்கிருந்தே இதற்கு தீர்வு எட்டப்பட முடியும்.

நல்லிணக்க ஆணைக்குழு தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது. அவர் அதனைப் பொது மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அது பொதுமக்களுக்கு எப்போது பகிரங்கப்படுத்தப்படும் என்று என்னால் கூற முடியாது. ஏனென்றால் அறிக்கை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. என்று அவர் குறிப்பிட்டுள்ளார். போரின் இறுதிக் கட்டத்தில் ஐ.நாவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்ய ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன், தொரயா ஒபெய்ட் அம்மையாரை நியமித்துள்ளது குறித்து கருத்து வெளியிட்ட ஜி.எல். பீரிஸ், அவர்கள் தம்மை விசாரிக்க விரும்பினால் அதைச் செய்யட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

2013-ம் ஆண்டில் இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கு முன்னர் மனித உரிமை செயற்பாடுகளில் முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும் என்ற பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கூறியுள்ள கருத்து தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்; வேறு நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காக எமது கொள்கைகளைத் தயாரிக்க முடியாது.

இலங்கை ஒன்றும் எவருடையதும் காலனித்தவ நாடல்ல. இது சுதந்திரமான இறைமையுள்ள நாடு.

எமக்கு எந்த நாடும் உத்திரவிட முடியாது. காலக்கெடு விதிக்கவும் முடியாது.

மக்களுக்கு எது நல்லதோ அதனையே நாம் மேற்கொள்வோம். வெளிநாட்டு அழுத்தங்களை ஏற்க மாட்டோம். பிரித்தானியாவின் கருத்தை நாம் நிராகரிக்கின்றோம் என்று கூறியுள்ளார். (பா-11)

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளைமறுதினம் 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.விமலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் க.தேவராஜாவும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர். (பா-11)


**பால்நிலை கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு**

**2011**

பிரதம அதிதி
**திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்**
அரச அதிபர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

இடம்:
கைலாசபதி கலையரங்கு,
யாழ். பல்கலைக்கழகம்.

காலம்:
நவம்பர் 5ஆம் திகதி சனிக்கிழமை

நேரம்:
காலை 9.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கல விளக்கேற்றல்
- 'யுகங்களின் மௌனக் கலைப்பு' பயிலுனர்களின் குழுப்பாடல் இசைப்பு
- வரவேற்புரை : செல்வி யோ.பிரபாஜினி, பயிலுனர்
- தலைமையுரை : திரு. கு. கௌதமன், பயிலுனர்
- சிறப்புரை : திருமதி சாந்தி சச்சிதானந்தம், பிரதம நிறைவேற்று அலுவலர், விழுது.
- சான்றிதழ் வழங்குதல்
- விழுது - பயிலுனர்களின் மலர் வெளியீடு
- வெளியீட்டுரை
- சிறுவயதுத் திருமணங்களின் சமூகத் தாக்கம் - ஆய்வு நூல் வெளியீடு
- ஆய்வு அறிமுக உரை : திரு.எஸ். ஹரிகரதாமோதரன், ஆய்வு உத்தியோகத்தர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.
- பிரதம விருந்தினர் உரை : திருமதி இமெல்டா சுகுமார், அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
- கலைநிகழ்ச்சி - நாடக அரங்காற்றுகை
- நன்றியுரை : திரு. ஆ. சான் பெனற், பயிலுனர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

YILJUTHU

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**

யாழ். மாவட்டக்கிளை,
இல. 23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பேசி: 021 222 9866
(சி-4891)

உலகினை மாற்றுவதற்குச் சிந்திக்கின்றதொரு சிறியகுழு மனிதர்களே போதும்
உண்மையில் இதுவரையில் அப்படித்தான் நடந்திருக்கின்றது.

**STUDY IN UK / GERMANY**

- No need IELTS
- 4 - 15 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் IELTS இல்லாமல் UK செல்லும் வாய்ப்பு.
- 45 நாட்களுக்குள் Visa பெற்றுக் கொடுக்கப்படும்.
- குடும்பத்துடன் வெளிநாடு செல்லும் வாய்ப்பு.
- 100% Visa உத்தரவாதம்.
- UK Visa பெற்றுக் கொடுக்க முன் எந்த ஒரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
- யப்பானில் இருந்து நவீன வகையான பஜீரோக்கள் இறக்குமதி செய்து தரப்படும்.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

**ISC LANKA (PVT) LTD**

No. 533, Stanly Road,
Rasavinthoddam junction,
Jaffna. (C-4890)

தொடர்புகளுக்கு
General Manager
K. Rajitha.
0773745447

# இன்று ஒரு தகவல்

## பக்தி போகிற பாதை!

ஓர் ஊரிலே ஒரு சந்நியாசி இருந்தார்.

அவர் ஒருநாள் ஒரு கனவு கண்டாராம். அந்தக் கனவிலே அவர் சொர்க்கத்திற்குப் போகிறார். அங்கே ஒரு பெரிய திருவிழா நடந்து கொண்டிருக்கிறது.

எங்கே பார்த்தாலும் அலங்கார வளைவுகள்... வண்ண மயமான விளக்குகள்... பாதைகள் பூராகவும் மலர்கள்... எல்லா கட்டடங்களும் ஒளி மயம்.

இவ்வளவு கோலாகலமாக... பிரம்மாண்டமாக அந்தத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அது என்ன திருவிழா என்பது இந்தச் சந்நியாசிக்குப் புரியவில்லை. அங்கே எதிரில் வந்து கொண்டிருந்தவரை நிறுத்தி, "என்ன விசேடம் இங்கே?" என்று விசாரித்தார்.

"உனக்குத் தெரியாதா இந்த விடயம். இன்று இறைவனுக்குப் பிறந்த தினம்... அதைத்தான் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுகிறோம். இதற்காக பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று வரப்போகிறது. இறைவனே அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்கிறார்!"

உடனே அந்தச் சந்நியாசி ஒரு மரத்து நிழலே ஒதுங்கி நின்றார்.

ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. ஒரு மதத்தின் பேரைச் சொல்லி... "இவர் அந்த மதத்தின் தலைவர் அவரைப் பின்பற்றுகிற மக்கள் கூட்டம் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்ற விபரம் சொன்னார்கள்.

இப்படியாக ஒவ்வொரு கூட்டமும் ஒலி பெருக்கி மூலம் சொல்லிக் கொண்டு சந்நியாசியைக் கடந்து போனார்கள்.

அதன்பின், சிறிது நேரம் செல்ல ஒரு வயதான ஆள் குதிரை மேலே வந்துகொண்டிருந்தார்.

ஆனால், அவருக்குப் பின்னால் யாருமேயில்லை. அவர் பரிதாபமாகத் தனியாக வந்து கொண்டிருந்தார்.

"இவர் யார்?... இவர் ஏன் இப்படி தனியாக வந்து கொண்டிருக்கிறார்" என்று அந்த சந்நியாசி கேட்டார்.

"என்ன இப்படி கேட்கிறீர்கள்... இவர்தான் கடவுள்... இவருக்குத்தான் இன்றைக்குப் பிறந்த நாள்..."

இதைக் கேட்டதும் அந்த சந்நியாசி திகிலுற்றார். இதுவரைக்கும் கனவு கண்டு கொண்டிருந்தவர் விழித்துக் கொண்டார். அதன்பின் யோசித்துப் பார்த்தார் உண்மைதான்.

மக்கள் எல்லோரும் பக்தி மார்க்கத்திலே போகிறதாக நினைத்துக் கொண்டு பாதை மாறி போய்க் கொண்டு இருக்கிறார்கள்... கடவுளை பின்பற்றுவதாக நினைக்கிறார்கள், பக்தர்கள். ஆனால், கடவுளுக்குப் பின்னால் யாருமேயில்லை.

இன்னமும் இயல்பாக இதைப் பற்றி யோசித்துப் பார்த்தால், உண்மைக்குப் பின்னாடிதான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம் என்று அதிகமானவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அந்த உண்மை அநாதையாக போய்க் கொண்டிருக்கிறது. அப்படியாக மாறிவிட்டது உலகம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்டம்

## யாழ்.அரச அதிபர் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

60 ஆயிரத்து 500 வீடுகளும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பின்பே குறைந்த வருமானம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களை வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்வது தொடர்பாக தீர்மானிக்கப்படும் என யாழ்.அரச அதிபர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் குறைந்த வருமானத்தை பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என கோரிக்கை விடப்பட்டதோடு சுனாமியினாலும் யுத்தத்தினாலும் பாதிப்படைந்தும் உள்ளனர் என குறிப்பிடப்பட்டது.

இதற்கு பதிலளித்த யாழ்.அரச அதிபர் யுத்தத்தினால் பாதிப்படைந்து மீள் குடியேற்றப்பட்ட நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களையே முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

60 ஆயிரத்து 500 குடும்பங்கள் ஏற்கனவே இந்த வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் இன்னும் தேவைப்படுகின்றது. இந் நிலையில் அரசாங்க உத்தியோகத்தர்களை எவ்வாறு பயனாளிகளாக இணைத்துக் கொள்வது.

யாழ். மாவட்டத்தில் 27 ஆயிரம் வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. ஏனைய வீட்டுத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு இந்திய அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவிகள் வழங்கி வருகின்றன.

25 ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த வருமானத்தை பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களை வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவில் உள்வாங்குமாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்பு இது தொடர்பாக தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் விசேட திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## அபிவிருத்திச்சங்கத்தினை பதிவு செய்யும் நிகழ்வு

மக்கள் வங்கி சுன்னாக கிளையினால் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அளவெட்டி விநாயகர் அபிவிருத்தி சங்கத்தினை பதிவு செய்வதற்கான நிகழ்வானது இன்று முற்பகல் 10.30 மணிக்கு அளவெட்டி மத்திய மகாஜன மண்டபத்தில் இ.தெய்வநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், சிறப்பு விருந்தினராக வறுமை ஒழிப்புநுண்பாக செயற்றிட்டம் II, திட்ட பிராந்திய முகாமையாளர் சி.திருவாகரன் ,தெல்லிப்பளை பிரதேச செயலர் சு. முரளிதரன், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் சு.இராசமனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக ஜே./ 125 பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர் க.கணேசுதாஸ், சோ. குமாரதாஸ் குருக்கள், ஜே/ 216 பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர் ந.முருகதாஸ், மகாஜன சபை தலைவர் வை. பாலசுப்பிரமணியம், சமுர்த்தி உத்தியோகத்தர் க.சத்தியதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 140 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 30 | 25 |
| கோவா | 30 | 40 | 30 |
| கரட் | 65 | 90 | 60 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 75 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 90 |
| பயற்றங்காய் | 100 | 100 | 130 |
| லீக்ஸ் | 30 | 40 | 35 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 70 | 90 | 60 |
| முருங்கைக்காய் | 25 | 60 | 50 |
| போஞ்சி | -- | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 50 |
| கீரை – 1 பிடி | 8-10 | 30 | 15 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 20 | 30 |

# இராசி பலன்

*03.11.2011*
*(ஐப்பசி 17, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 3.31 மணிவரை*
*திருவோணம் பிற்பகல் 5.24 மணிவரை*
*இராகுகாலம் 1.34-3.04 மணிவரை*
*சுபநேரம் 7.34-9.04 மணிவரை*
*அட்டமி, நவமி.*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் ரீதியாக புதிய முன்னேற்றம் காணப்படும்.

**இடபம்** பூமி வாங்க எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும், தடைப்பட்ட காரியங்கள் நடைபெறத் தொடங்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்** வரவைக் காட்டிலும் செலவு கூடும், எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக் குறைவான நாள்.

**கடகம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும், நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், காரியங்கள் கைகூடும்.

**சிங்கம்** பெண்களால் பெருமை சேரும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், தொழிலில் முன்னேற்றம் காணப்படும், வருமானம் திருப்தி தரும், பிள்ளைகளால் பெருமை சேர வேண்டிய நாள்.

**துலாம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் வீடு தேடி வருவர், தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பெரியோரால் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்** பாராட்டும் புகழும் அதிகரிக்கும், பெரிய மனிதரின் சந்திப்பால் ஆச்சரியப்படக்கூடிய செயலொன்றை செய்து முடிப்பீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்** வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும், சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்யலாம், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு கிடைக்கும்.

**மீனம்** பணவரவு அதிகரிக்கும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்

## மாதர் சங்க பொதுக்கூட்டம்

(நல்லூர்)

கோப்பாய் மத்தி மாதர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் மத்தி கிராம சேவையாளர்அலுவலகத்தில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.நிர்மலன் கலந்து கொண்டு சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடவுள்ளார். (2-3-134)

## செயற்குழுக்கூட்டம்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலகத்தின் செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரவெட்டிபிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (2-3-24)

## அடிக்கல்நாட்டு விழா

யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பஞ்ச தல இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி 8.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

பக்தர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-3-136)

# விளையாட்டு கழகங்களின் பதிவுகள் புதுப்பித்தல்

(கரவெட்டி)

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்புக்கமைய வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டு உத்தியோகத்தரிடம் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய விளையாட்டு கழகங்கள் தமது பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பு, கழக வீர,வீராங்கனைகளின் விபரம், பொதுக் கூட்ட அறிக்கைப்பிரதி, கழக அங்கத்தவர்களின் விபரம் ஆகியவற்றை தவறாது சமர்ப்பிக்கு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டிற்கான பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்ற முடியாத சூழ்நிலை உரு வாகும் என கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (2-3-24)

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டர் ஊக்குவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளையின் பருத்தித்துறை பிரிவுக்கான தொண்டர் ஊக்குவிப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை கந்தவுடையார் ஒழுங்கையில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவை சங்க காரியாலயத்தில் இச்சங்க பருத்தித் துறைப் பிரிவு தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை உதவிஅரசாங்க அதிபர் ஆர்.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான சுகாதார மேம்படுத்தல் பிரதிநிதி றேவேக்க கபுறா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பரிசில்கள் வழங்கல், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளதாக சங்க தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் அறிவித்துள்ளார் (2)

## பொதுக்கூட்டம்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க கொழும்பு தேசிய தலைமையகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் மார்கழி மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்முறை இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.மாவட்ட கிளையில் இருந்து 38 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-3-134)




## சிறுவர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினம் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் பிரதி அமைச்சர் எம்.எஸ். ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-6)

# நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(பொலிகண்டி)

யாழ்.கரணவாய் தாமோதர வித்தியாலய நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.குருகுலலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பௌதீகவியல் ஆசிரியர் இ.பொன்னம்பலம் ,சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல் துறைத் தலைவர் சி.சிறிசற்குணராசா ,யாழ்.பல்கலைக்கழக உயிரியல் இரசாயனத்துறை தலைவர் ச.பாலகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பி.ப 3.10 மணிக்கு நூற்றாண்டு மலர் வெளியீடும் 25 வருடங்கள் சேவையாற்றிய ஆசிரியர்களை கௌரவித்தல், மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (2-3-48)

# வாக்காளர் இடாப்பில் பதிய தவறியோர் கவனத்திற்கு...

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டதன் படி யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் 41715 வாக்காளர் பதிவு நீக்குவதற்கும் 16999 வாக்காளர்களை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை முன்வைப்பதற்கான காலப்பகுதியானது நேற்றுத் தொடக்கம் இம்மாதம் இறுதிவரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான படிவங்கள், புத்தகங்கள் காட்சிப்படுத்துவதற்காக அந்தந்த பிரதேச செயலர் களகளுக்கும் கிராம அலுவலர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இதுவரை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத்தவறியவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாக குறித்த காலப்பகுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (2)

# முகாமைத்துவ போட்டியில் நல்லூர் பிரதேசசபை முதலிடம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி அமைச்சினாலும் உள்ளூராட்சி திணைக்களத்தினாலும் 2009, 2010 ஆம் ஆண்டளவில் நடத்தப்பட்ட முகாமைத்துவ போட்டியில் நல்லூர் பிரதேச சபை மாகாண மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் முதலிடம் பெற்றுள்ளது.

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான கண்காட்சியும் மாநாடும் மூன்று நாட்களாக வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் இறுதி நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் போதே வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் நல்லூர் பிரதேச சபைக்கு முதலிடத்திற்கான வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது.


இதேவேளை உள்ளூராட்சி சபைக்கான கண்காட்சியிலும் நல்லூர் பிரதேச சபையே முதலிடத்தை பெற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பொது இடத்தில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று நபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதமும் ஏனைய இருவருக்கும் தலா 3ஆயிரம் அபராதமும் செலுத்தத்தவறின் மூவருக்கும் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (2-3)







வடமாரட்சி தெற்கு மேற்குபிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் தின நிகழ்வு அண்மையில் நெல்லியடி தடங்கன் குழியடி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் அழைத்துவரப்படுவதையும், பிரதம விருந்தினர் முதியோர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறுவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காண லாம். (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# இ.போ.சபைக்கு நாள்தோறும் மேலதிக செலவாக 22 இலட்சம் ரூபா

எரிபொருள் விலையேற்றத்தால் இலங்கை போக்குவரத்து சபைக்கு நாளொன்றுக்கு 22 இலட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்படுவதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

இந்த எரிபொருள் விலையேற்றமானது உணரக் கூடியளவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படுமா என கூற முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்து அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிபொருள் விலையேற்றத்தால் இலங்கை போக்குவரத்து சபைக்கு நாளொன்றுக்கு 22 இலட்சம் ரூபாய் மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது. இது எமக்கு மாத்திரமல்ல தனியார் துறைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

எரிபொருள் விலையேற்றமானது 4 சதவீதத்துக்கு அதிகமாக இருந்தால் மாத்திரமே பேருந்து கட்டணத்தை அதிகரிக்க முடியும். ஆனால் தற்போதைய எரிபொருள் அதிகரிப்பானது 3.2 சதவீதமேயாகும்.

தற்போது எரிபொருள் விலையேற்றமானது சற்று அதிகமானதுதான் என்றாலும் கூட பஸ் கட்டணத்தை அதிகரிப்பதில் சிக்கல்கள் உள்ளன. 4 சதவீத எரிபொருள் அதிகரிப்பு ஏற்பட்டால் பஸ் கட்டணத்தை அதிகரிக்கலாம் என அமைச்சரவை அனுமதித்துள்ள போதும் அது வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த எரிபொருள் அதிகரிப்பால் பேருந்து உரிமையாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மை. ஆனால் அதற்கு எனது அமைச்சினால் எதனையும் செய்ய முடியாது. மாறாக தனியார் போக்குவரத்து அமைச்சர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்படியோ இந்த விலை அதிகரிப்பானது உணரக் கூடிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். (2)

# குத்தகைக்கு விடப்பட்ட காணிகளை திறைசேரி பொறுப்பேற்க சட்டமூலம்

கடந்த இருபது வருடங்களில் அரச மற்றும் அரச நிறுவனங்களினால் குத்தகைக்கு அல்லது வேறு விதமாக பொறுப்புச் சாட்டப்பட்டிருந்த காணிகளை மீள திறை சேரியினால் பொறுப்பேற்கும் வகையில் சட்ட மூலம் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

குறைதிறன் கொண்ட வியாபாரிகள் மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள் மீள வழமைக்கு கொண்டு வரும் நோக்கிலான சட்டமூலம் உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடா பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலீட்டுசபை சட்டம் அல்லது அதன் கீழான விதிமுறைகளின் பிரகாரம் அறவிடும் ஏதேனும் சட்டத்திற்கு அமைய வரிச் சலுகை பெற்றுள்ள காணிகளையும் பொறுப்பேற்கும் அதிகாரம் அந்தச் சட்டத்தின் மூலம் திறைசேரிக்கு வழங்கப்படுவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எதிர்பாராத மீதியை செலுத்திய மற்றும் நீண்டகாலமாக வழக்குகளுடன் தொடர்புபட்டுள்ள ஏதேனும் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனமோ அல்லது அதிகார்ர சபையையோ இதன் மூலம் பொறுப்பேற்க முடியும் என்றும் ஜோன் அமரதுங்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி உபவிதிப்படி குறிப்பாக நிறுவனங்கள் மற்றும் சொத்துக்களாக பெலவத்த சீனி நிறுவனம், செவனகல சீனி நிறுவனம், செலின்கோ புரோபர்ட் நிறுவனம் ஆகியவற்றின் காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலம் காரணமாக அடிப்படை பிரஜா உரிமைகள் மீறப்படுவதாக எதிர்க்கட்சி பிரதம கொரடா தெரிவிக்கின்றார். சட்டமூலத்தை அவசரமாக நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி அதனை எதிர்ப்பதாக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# இலங்கையில் நல்லாட்சி ஏற்படுவதற்கு பொதுநலவாய நாடுகள் தலையிட வேண்டும்

## பாரதவின் குடும்பம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் நல்லாட்சி ஏற்படுத்தப்படுவதை பொதுநலவாய நாடுகள் அமைப்பு உறுதிப்படுத்த வேண்டும் என்று படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கு பாரதவின் சகோதரர் அசேல பிரேமச்சந்திர எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பாரத உள்ளிட்ட ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட சிலர் காயமடைந்திருந்தனர்.

இலங்கையில் நல்லாட்சி ஏற்படுத்தப்படுவது தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு தலையீடு செய்ய வேண்டுமென பாரதவின் சகோதரர் கோரியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு நல்லாட்சி மற்றும் மனித உரிமை விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஓர் அமைப்பு என்ற காரணத்தினால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படுவதாக அசேல தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசு மனித உரிமை பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பில் கரிசனை கொள்ளத்தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ள்ளார். இந்த இரண்டு பிரதான காரணிகள் குறித்து இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பதனை பொதுநலவாய நாடுகள் அமைப்பு வலியுறுத்த வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2)

# புற்றுநோய் சிகிச்சைக்கு என்ற பேரில் பெண்ணொருவர் இந்தியாவுக்கு கடத்தல்

(கொழும்பு)

புற்றுநோய்க்கான சிகிச்சைகளுக்காக இந்தியாவிற்கு அழைத்துச் செல்வதாக கூறி பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளை- இப்பன்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான மூன்று பிள்ளைகளின் தயாரான ஈ.சி.காந்தி என்பவர் கடந்த மாதம் 18 ஆம் திகதி தாம் கண்டி பொது வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக சென்றதாக தெரிவித்துள்ளார்.

தம்மை வைத்தியர்களாக இனங்காட்டிக் கொண்ட சிலர் பெண்ணின் நோயை குணப்படுத்துவதற்காக இந்தியாவிற்கு அழைத்துச் செல்வதாக உறுதியளித்தமையை அடுத்தே அவர் அங்கு சென்றதாக குறிப்பிட்டார்.

அதன்பின்னர் நோயாளர் காவு வாகனம் ஒன்றில் தன்னை 4 பேர் கொண்ட குழு கொழும்பு நோக்கி அழைத்து வந்ததாக அந்தப் பெண் தெரிவித்தார்.

வரக்காபொல பிரதேசத்தை அண்மித்த போது திரவ பால் பைக்கற் ஒன்று தமக்கு வழங்கப்பட்டதாகவும் பின்னர் தாம் சுய நினைவுக்கு திரும்பிய வேளையில் வேறு உடை அணிவிக்கப்பட்டு தனிமையான அறையொன்றில் வைக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தன்னிடம் இரத்தம் பெறப்பட்ட பின்னர் விருப்பத்திற்கு ஒவ்வாத வகையில் தலைமுடியும் வெட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார். (2)

# சொத்து விபரங்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு சட்ட நடவடிக்கை

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பான தமது சொத்துக்களை பற்றிய விபரங்களை சமர்பிக்காத கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட 10 வேட்பாளர்களுக்கு எதிராக தேர்தல் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்குமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தெரிவான உறுப்பினர்களிடம் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 420 வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களில் 410 வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை எழுத்து மூலமாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளனர்.

ஆளும் சுதந்திர ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு சார்பில் வேட்பாளர்கள் 245 பேர் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை அறிவித்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட 131 வேட்பாளர்களில் 130 பேர் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை அறிவித்துள்ளனர். மக்கள் விடுதலை முன்னணி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட 6 உறுப்பினர்களும் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை பிரகடனப்படுத்தியுள்ளனர். இதேவேளை தெரிவு செய்யப்படாத உறுப்பினர்கள் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பிக்க எதிர்வரும் 25 ஆம் திகதி கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (2)



கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

www.sagittarius.lk

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு சமூகம் தரும் போது கடந்த ஒக்டோபர் மாதம் வரை தினவரவு பதிவேட்டின் படியான மாணவர் வரவுகளையும், பெயர் விபரங்களையும், உள்ளக மேற்பார்வை அறிக்கைகளையும், எமது திணைக்களம் தவிர்ந்த வேறு அரச அரசசார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர்விபரங்களையும், இடைவிலகிய மாணவர்களுடைய பெயர் விபரங்களினையும் எடுத்துவருமாறு துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (3-15)


## இலவச அழகுக் கலைப் பயிற்சி

யாழ். மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம் உங்கள் கனவுகளை நனவாக்க உங்களுடன் இணைகின்றது....

**ORIFLAME**

சுவீடன் நாட்டு அழகு சாதன உற்பத்திப் பொருட்களை இலங்கையில் சந்தைப்படுத்துவதில் முதன்மையாக விளங்கும் ORIFLAME நிறுவனத்துடன் நீங்கள் இணைவதன்மூலம்

- இலவச அழகுக் கலை பயிற்சிகளையும் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வரையறையற்ற
- வருமானம் உழைக்கலாம்.
- இன்னும் பல...

இலவச கருத்தரங்கு...

இடம் :- ORIFLAME யாழ். கிளை (187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

காலம் :- 05.11.2011

நேரம் :- முற்பகல் 10.30

இவ் அரிய சந்தர்ப்பத்தில் ORIFLAME உங்களுக்காக ரூபா 490 முதலீட்டுடன் சுயாதீன தொழில் ஊக்குவிப்புத்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

இக்கருத்தரங்கில், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற தன்நம்பிக்கை, ஊக்கமும் உள்ள இளைஞர், யுவதிகள் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளலாம். அனுமதி முற்றிலும் இலவசம்.

தொடர்புகளுக்கு:- 077 2288243/0771336124

(6720)


## சனத்தொகை மதிப்பீடு காலவரையறையின்றி ஒத்திவைப்பு

ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் ஒருமுறை நடத்தப்படும் சனத்தொகை மதிப்பீடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சனத்தொகை மற்றும் கணக்கெடுப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான ஆவணங்களை அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கான காரணம் என திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டுமாதங்களுக்குள்ளேயோ அல்லது அதற்கு முன்னதாக தினம் ஒன்றை அறிவிக்க முடியாது என அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

பெரும்பாலும் அடுத்த வருட ஆரம்பத்திலேயே குறித்த சனத்தொகை மதிப்பீடுகளை மேற்கொள்ள கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

தேவைப்பாடுள்ள ஆவணங்களை அச்சிடுவதற்காக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதும் திருப்திப்படும் வகையில் அச்சிடல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கூடிய விரைவில் அந்த அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு மாவட்ட செயலாளர் காரியாலயங்களுக்கு அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது (2)


## வெளிமாவட்டத்திலிருந்து கிளிநொச்சி ஊடாக பணிசெய்யும் ஊர்தி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் பார்வைக்கு

அன்புடையீர்,

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து அதிகாலை 5.00 மணிக்கு பேருந்துப்பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றது. இப்பணிகளிற்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை. காரணம் வெளிமாவட்டங்களில் இருந்து கிளிநொச்சி ஊடாக பணிசெய்யும் பேருந்துகள் கிளிநொச்சிப் பகுதிகளில் பயணிகளை ஏற்றுவதனால் தொடர்ந்தும் எமது பேருந்துகள் பூரணமாக பணியாற்ற முடியாதுள்ளது.

ஆகவே தயவு கூர்ந்து வெளிமாவட்டங்களிலிருந்து கிளிநொச்சி ஊடாக பணி செய்யும் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் கிளிநொச்சிப்பகுதிகளில் பயணிகளை ஏற்றுவதனை தவிர்த்து ஒத்துழைப்பு நல்குமாறும் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாட்டினை ஆய்வு செய்து தொடர்ந்தும் இந்நிலை ஏற்படின் அதற்குரிய சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்,

நிர்வாகம்,

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்,

கிளிநொச்சி.

(6716)


## இலட்சார்ச்சனையும் ஜமஸம்ஹாரமும்

சுதுமலை அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமிதேவஸ்தான இலட்சார்ச்சனையும் ஜமஸம்ஹாரமும் நேற்றைய தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் தினமும் அபிஷேகம், விசேட பூஜை, இலட்சார்ச்சனை, ஹோமம் என்பன நடைபெற்று, ஐப்பசி மாதக் கடைசி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு புண்ணிய வாகனம், கும்ப பூஜை, தீபாரதனை, அர்ச்சனை, விசேட திவ்யஹோமம், மகாபூர்ணாகுதி, மூல மூர்த்திக்கு அபிசேகம், பூஜை என்பன நடை பெற்று மாலை 4 மணிக்கு ஜமஸம்கார உற்சவம் என்பன நடைபெறவுள்ளது. (2)


# KALAIMAGAL International College

NOTHING IS IMPOSSIBLE

**இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.**



(க-4889)

இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை (English Medium)
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.

**மேற்குறிப்பிட்ட சிறந்த செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான அனைத்து வகுப்புகளுக்குமான விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.**

*மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:*

**KALAIMAGAL International College**

CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.

T.P.: 021 4923235, 0778834592, 0774904286, 0776548283

NOTHING IS IMPOSSIBLE

# வடக்கு, கிழக்கின் காணிப்பதிவின் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் காணி உரிமையாளர்கள் தமது விபரங்களை பதிவு செய்யக் கோரி காணி ஆணையாளர் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணையை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

நீதிபதி டபிள்யூ.பி.ரஞ்சித் சில்வா முன்னிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள், ஆகிய இரு தரப்பினரும் சுற்றறிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பை கருத்திற் கொள்ள அவகாசம் கோரிய நிலையில் இவ்வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் சட்டத்தரணி மொஹான் பாலேந்திவுக்கூடாக இம்மனுவை தாக்கல் செய்திருந்தார்.

காணி ஆணையாளர் திணைக்களத்தின் சுற்றறிக்கையான குரோதமனப்பாங்குடன் சட்டவிரோத வகையில் வடக்கு-கிழக்கில் வாழும் மக்களுக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை புறக்கணிக்கும் வகையில் உள்ளதாக மனுதாரரான சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தனக்குச் சொந்தமான காணிகள் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ளதாகவும் இச்சுற்றறிக்கையில் தான் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறும் உத்தரவிடுமாறு கோரியும் தனது மனு தொடர்பான வழக்கு விசாரணை முடியும் வரை சுற்றறிக்கையின் படி செயற்படுவதை இடைநிறுத்துமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக்கோரியும் மனுதாரரான எம்.ஏ. சுமந்திரன் எம்.பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். (2)

# மருத்துவர் கொலை தொடர்பாக இராணுவக் கப்டன் நீதிமன்றில்

கடந்த செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி கரந்தெனிய தலஹந்திய பகுதியிலுள்ள வைத்தியசாலைக்கு முன்பாக வைத்தியர் பிரசாத் ஜயசிங்கவை திட்டம் தீட்டி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவ கப்டன் ஒருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

குறித்த வைத்தியரை கொலை செய்வதற்கு கரந்தெனியவைச் சேர்ந்த சிந்தன ருவான் ஜயசேகர என்ற நபரும் உடந்தையாக இருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான விசாரணை நடத்துவதற்காக இச் சந்தேக நபரை தடுத்து வைப்பதற்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் அனுமதி கோரியுள்ளனர். (2)

# பாதுகாப்புச் செலவிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் அதிகளவு படையினர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் அவர்களுக்கு சம்பளங்களை வழங்குவதற்காக அதிகளவு பணம் செலவிடப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கூடுதல் தொகை முதலீடுச் செலவாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனநாயகம் கிடையாது என்பதில் உண்மையில்லை.

கட்சி யாப்பு விதிகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. ஒரு சில முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் கட்சியில் சர்வாதிகார ஆட்சி நிலவுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

ரணில் விக்ரமசிங்கவிடம் குறைகள் இல்லாமில்லை. சில வேளைகளில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படலாம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நல்ல தொரு வேட்பாளரை நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சி யாருக்கும் எழுதிக் கொடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் நாடு கடத்தப்படுவாரா?

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ்சை பிரித்தானியாவில் இருந்து சுவீடனுக்கு நாடு கடத்துவது குறித்த இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அமெரிக்க இராஜாங்க விவகாரங்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இவரை சுவீடனுக்கு நாடு கடத்துவதா இல்லையா என்று லண்டன் நீதிமன்றம் தீர்மானிக்கவுள்ளது.

நாடு கடத்துமாறு சுவீடன் விடுத்திருந்த வேண்டுகோளை பிரித்தானியா ஏற்றுக் கொண்டிருந்தபோதிலும் இந்த தீர்மானத்துக்கு எதிராக ஜூலியன் அசேஞ் மேன்முறையீடு செய்திருந்தார்.

பெண்கள் இருவரால் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டன. அமெரிக்க இராஜாங்க தகவல்களை வெளியிடும் பணிகளை நிதி நெருக்கடியினால் விக்கிலீக்ஸ் இணையத்தளம் இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# முறைப்படி பயன்படுத்தாத சொத்துக்களை அரசு சுவீகரித்தல் உரிமை மீறலாகும்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

உரிய முறையில் பயன்படுத்தப்படாத சொத்துக்களை சுவீகரிக்கும் அரசாங்கத்தின் உத்தேச சட்டமானது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

உரிய முறையில் பயன்படுத்தப்படாத சொத்துக்கள் அல்லது சரியான முறையில் இயங்காத நிறுவனங்களை சுவீகரிக்கும் சட்ட மூலத்தை அரசாங்கம் அவசர அவசர மாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றில் உத்தேச சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த சட்டத்தின் மூலம் சட்ட ரீதியான முறையில் தொழில்களில் ஈடுபடுவதற்கு முயற்சியாண்மைகளில் ஈடுபடுவதற்காக மக்களின் அடிப்படை உரிமை முடக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டத்தை மீளாய்வு செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென ஜோன் அமரதுங்க, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கடிதம் ஊடாக கோரியுள்ளார். 37 நிறுவனங்களை அரசாங்கம் இவ்வாறு சுவீகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். (2)

# கஞ்சாவுடன் சிக்கினார் சிறைக்காவலர்; வெலிக்கடை சிறைச்சாலையில் சம்பவம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ளாடைக்குள் கஞ்சா பொதியொன்றை மறைத்து வைத்துக் கொண்டு சிறைச்சாலைக்குள் செல்ல முயன்ற சிறைக்காவலர் ஒருவர் சிறைச்சாலைகள் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. இரகசியத் தகவலொன்றுக்கமைய அதிகாரிகள் சோதனையிட்ட போது உள்ளாடைக்குள் இருந்த 50 கிராம் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது.

அதன் பின் இவரது பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அறை சோதனையிட்ட போது அங்கிருந்த 50 கிராமுக்கு அதிகமான எடை கொண்ட கஞ்சாப் பொதியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் நீண்டகால்மாகவே இவ்வாறு சிறைச்சாலைக்குள் கஞ்சாவைக் கடத்தி வந்து வியாபாரம் செய்துள்ளார் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளுடன் சந்தேக நபர் கொழும்பு-பொரள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (2)



யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு அண்மையில் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரீன் அப்பயனாளிக்கு கடற்தொழில் உபகரணங்களை வழங்குவதையும் பிரதேச செயலர் பொலிஸ் அதிகாரிகள், முகாமைத்துவ பணிப்பாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பதிவு செய்யப்படாத மருந்து விற்பனை நிலையங்கள் முற்றுகை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தின் பிரபல வர்த்தக தொகுதியொன்றினுள் பதிவு செய்யப்படாது நடத்திச் செல்லப்பட்ட இரண்டு மருந்து விற்பனை நிலையங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளன.

இந்த இரு மருந்து விற்பனை நிலையங்களுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் தலைவர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக மாத்திரம் 20 மருந்து விற்பனை நிலையங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

இந்த சோதனை நடவடிக்கைக்காக தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் விசேட மூன்று குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அதிகார சபையின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலுமோரு மருந்து விற்பனை நிலையத்தில் மருந்தாளர் ஒருவர் காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கொழும்பு மாநகர சபை பகுதிகளில் 15 அழகூட்டு நிலையங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (2)

# ஆரோக்கியத்தில் ஆத்மநல மருத்துவ அணுகுமுறை

**யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வழிகாட்டலிலும், வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணானந்தனின் அனுசரணையுடனும் குடாநாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் நடைபெறும். நோயாளர் பராமரிப்பில் புதிய அணுகுமுறை என்ற கருத்தரங்கில் வைத்திய கலாநிதி க.குகதாசன் எடுத்துரைத்த விடயங்களின் தொகுப்பு**

வைத்திய கலாநிதி
க.குகதாசன்

ஆரோக்கியம் என்றால் என்ன? "நோய் அற்ற நிலை மட்டுமே. நல் ஆரோக்கிய நிலை அல்ல. ஆரோக்கியம் என்பது," முழுமையான உடல், உள, சமூக வளர்ச்சி, ஆத்ம நல மேம்பாடுடைய, முழு வளர்ச்சி நிலையே" என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

இவ்வரைவிலக்கணம் மூலம் நோயற்ற ஆரோக்கியமான வாழ்விற்கு, "ஆத்மநலனும்" மிக முக்கியமானது என்பது கண் கூடு.

உடல் நலம் பேணுவதற்கு எவ்வாறு உடல் நலமும், மனநலமும், சமூக நற்பண்புகளும், சமூக ஒழுக்கம், புகைபிடிக்காத, மது அருந்தாத சமூக ஒழுக்க நெறிகளும் அவசியமோ, அவ்வாறே ஆத்ம நலமும் மிக முக்கியமானது. மனம்பாதி, மருந்துபாதி என்ற கூற்றினை மெய்ப்பிக்கின்றது ஆத்ம நல மருத்துவ அணுகுமுறை.

முன்பு இல்லாதவாறு ஆத்மநல மருத்துவ முறை இன்று பரவலாக எல்லோராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

நோயின் உபாதையைவிட, நோயாளி நோயைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டிருப்பது பெரிய உபாதையாகி விடுகிறது. அதனால் நோயாளிகளின் கவனத்தை பொழுதுபோக்குகளில் திருப்புவதற்கு மருத்துவர்கள் முயற்சிக்கின்றனர். பலவிதமான நோய்கள் மன பாதிப்பினால் ஏற்படுவதாக மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன. உதாரணமாக குடற்புண், இரத்த அழுத்தம், இதய நோய் போன்றவற்றுக்கு மன பாதிப்புகளே பெரும்பாலும் காரணமாக அமைகின்றது. உடல் ஆரோக்கியத்துக்கு மன ஆரோக்கியம் மிகவும் அவசியம் என்பது தெளிவாகிறது.

**உடலை பாதிக்கும் தவறான உணர்ச்சிகள்**

"நான் மிக நல்ல உடல் நலத்துடன் வாழ்கின்றேன்" என்கிற நம்பிக்கையே உடல் நலத்தை பெருமளவு பெறுகின்றது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். தவறான உணர்ச்சிகள் உடலில் பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. குற்றம், குறை கண்டு பிடித்தல், பொறாமை, வெறுப்பு போன்ற உணர்ச்சிகளிலிருந்து நாம் விடுபடுவது உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியம். அதே சமயம் அன்பு, இரக்கம் பாசம் போன்ற உணர்ச்சிகள் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன.

மனதை எப்படி வைத்திருக்கிறோமோ அதுபோலவே எங்களுடைய வாழ்க்கையும் அமைகிறது. நம்முடைய முன்னோர்கள் அறிந்து சொன்ன இந்த உண்மையினை நவீன மனோதத்துவ ஆராய்ச்சிகளும் உறுதி செய்கின்றன. "மனம் போல வாழ்வு" என்பது மகத்தான உண்மை!

இவ்வாறான மனத்தினால் ஏற்படும் நோய்களை மனத்தினாலேயே மாற்ற முடியும். பெரும்பாலான நோய்கள் அடிப்படையில் மனதுடன் தொடர்பு கொண்டவையாக இருப்பதை பலரும் உணருவதில்லை. அவற்றின் விளைவுகள் உடலில் வெளிப்படுகின்றன. மனதின் காரணமாக ஏற்படும் நோய்கள் என்று இவற்றை சொல்லலாம். மனதில் ஏற்படுகின்ற தாக்கம் உடல் கோளாறுகளால் வெளிப்படுகின்றன.

மருத்துவமனைகளில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட நோயாளிகள் மனதால் விளைந்த உடல் கோளாறுகளை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். உடலில் ஏற்படும் கோளாறுகள் பெரும்பாலானவை மனதின் தாக்கத்தால் ஏற்படுகின்றன என்பதற்கு புதுப்புது ஆதாரங்கள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. சிலர் தொண்ணூறு சதவிகிதம் வியாதிகளுக்கு மனமே காரணம் என்கிற முடிவுக்குக்கூட வந்திருக்கிறார்கள்.

"உடல்" மனதினால் மன எண்ணங்களினால் மன உணர்ச்சிகள், எழுச்சிகள் போன்றவற்றினால் இயங்குகின்றது. "மனம், உடல்" ஆகியவற்றை பிராணன் இயக்குகின்றது.

மனம், உடல், பிராணன் ஆகிய மூன்று முக்கிய செயற்பாடுகளை, "ஆன்மா" இயக்குகின்றது. இதனிலிருந்து, ஆன்மாவின் முக்கியத்துவத்தினை உங்களால் அறிய முடியும்.

ஆன்மாவினை எவ்வாறு போற்றிப் பேணிப் பாதுகாத்து, அதனை நல்லநிலையில் இயங்கவைத்து அதனை உங்களது நல் ஆரோக்கிய மேம்பாட்டிற்காகத் தூண்டி இயக்க முடியும்?

ஆன்மாவினை துடிதுடிப்புடன், ஆத்ம பலத்துடன் இயக்குவதற்கு, தியானம், செபம், பிரார்த்தனை, மந்திரக் கட்டளைகள், சுய ஊக்குவிப்புச் சபதங்கள் ஆகியவை மிகவும் உதவும்.

மனதில் ஒரு விடயத்தினைத் திரும்ப, பலதரம் இடைவிடாது தொடர்ந்து நாட்கணக்கில், வாராவாரம், மாதம் மாதமாக, வருடக்கணக்கில் எண்ணி எண்ணி, திடமாக, தீரமாக, தீவிரமாக மனதினில் பதியும் மதியினையே (மந்)+(தீரம்) நாளடைவில் மந்திரம் என்று மருவியுள்ளது. தந்திரம் என்பது அம்மந்திரத்தினைக் கடைபிடிக்கும் முறை.

மந்திரம்,செபம், தியானமுறை, பிரார்த்தனை ஆகிய அணுகுமுறையாவும், அடையவேண்டிய விடயத்தினைத் திரும்பத்திரும்ப முழுமன நம்பிக்கையுடன் பக்தியுடன் முழுமன ஈடுபாட்டுடன் கூறுவதேயாகும்.

ஆத்மாவுக்கு நீங்கள் இடும் வேண்டுகோள்கள் யாவும் ஆத்மாவைச் சென்றடைந்து, ஆத்மா, ஆத்மபலமடைந்து, ஆத்ம திண்ணியம் அடைந்து, நீங்கள் வேண்டிய விடயங்களை, கருமங்களை, வேண்டியவாறே நிறைவேற்றும் நிலையினை ஆத்மா உங்களுக்குத் தந்து உதவுகின்றது. ஆத்மாவே, உடல், உள, பிரானணை, வேறு பல உடல் உறுப்புக்களை இயக்குபவர். ஆகையினால் உங்கள் வேண்டுகோள்களைப் பிரார்த்தனைகளை, நீங்கள் வேண்டியவாறே, உங்கள் வேண்டுகோள்களுக்கு அமையவே இயக்கிவருவார். இதுவே "ஆத்ம பலம்" என்று கூறுவார்கள்.

**ஆத்மபலம்**

"நான் இன்றும், என்றும் மிக நல்ல தேக ஆரோக்கியத்துடன், வாழ்வேன், வளர்வேன், உயர்வேன், உன்னத தேக ஆரோக்கிய நிலை அடைவேன்" என்று பலதரம் திரும்பத் திரும்ப தினம் தினம், வாராவாரம், மாதாமாதம், வருடாவருடம் கூறிக்கூறி வருவர்களுக்கு, ஆத்மபலம் பொங்கிப் பெருக்கெடுத்து அத்தகைய தேக ஆரோக்கியத்தினை நல்கிடும்.

இவ்வாறான, ஆரோக்கிய வாழ்வினை, அடையவேண்டிய எண்ணங்களை, நினைவுகளை, திரும்பத் திரும்ப, பலமுறை, எண்ணுவதும், மனதினில் கூறுவதும், மனதில் அத்தகைய தேக ஆரோக்கிய நல்வாழ்வு, நலன்களை மனதிலே காட்சிப்படுத்தி காண்பதினையும் அத்தேக ஆரோக்கிய நல்வாழ்வு பெருகும் பொழுது, நீங்கள் அடையும், அனுபவிக்கும் ஆனந்தத்தினை மனக் கண்மூலம் கண்டு ஆனந்திப்பது ஆகியவைகளின் கூட்டு எண்ணத் தொகுப்பே "மந்திரமாகும்."

"உங்கள் எண்ணங்களே உங்களை ஆளுகின்றன. நீங்கள் எவை எவற்றைத் தொடர்ந்து, இடைவிடாது, முழுமன நம்பிக்கையுடன், தீராத வேட்கையுடன், நினைக்கின்றீர்களோ, கூறுகின்றீர்களே, மனதினில் வேண்டுகோளாக விண்ணப்பிக்கின்றீர்களோ அவ்வாறாகவே நீங்கள் ஆக்கப்படுவீர்கள்.

நான் நல்ல ஆரோக்கியசாலி, என்னில் நல்ல நோய் எதிர்ப்புச் சக்தி வளர்ந்து வளர்ந்து வருகின்றது. நான் இன்றும், என்றும், பரிபூரண தேக ஆரோக்கியத்துடன் வாழ்வேன் என்று இடைவிடாத தொடர் எண்ண எழுச்சித் தியானமே" மிகச்சிறந்த நோய் எதிர்ப்புச்சக்தி. உங்களுள்ளேயே இருக்கும் ஆத்மசக்தியை உங்கள் முழுமன நல உடல்நல ஆரோக்கியத்திற்காக நன்றாகப் பயன்படுத்தலாம்.

முழுமன ஒருமைப்பாடின்றி ஆற்றும் எந்தச் செயலும், முழுமை அடையாது. தியானம், செபம்,மந்திரம் ஓதுதல்,பிரார்த்தனை செய்வது ஆகியவை யாவும்,மன ஒருமைப்பாட்டிற்கு வழிசமைக்கிறது. ஆத்ம சக்தியைப் பெருக்குகின்றது. ஆத்மா உங்கள் வேண்டுகோள்களை நிறைவேற்றவல்ல சக்தியினைப் பெற்று, அதற்காக முனைகின்றது. மேலே கூறப்பட்ட அணுகுமுறைகள் மூலம் நீங்களும் ஆத்மசக்தி பெறமுடியும்.

பலர் நோய் அடைவதற்குக் காரணம், மனத்துக்குப் போதிய நல்லெண்ணப் போஷாக்கு இல்லாமையே. ஊட்டச் சத்து நிறைந்த எண்ணங்கள் குறையும் போது, உள்ளத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

உடலுக்குப் பயிற்சி கொடுப்பது போல் மனத்துக்கும் நல்லெண்ணங்கள் நிறைந்த மனப் பயிற்சி கொடுக்க வேண்டும். இல்லாவிடில் பலவித வியாதிகளுக்கு ஆளாகும் அபாயம் உண்டு.

நீங்கள் எவ்விதமான உடல்நலத்தை அடைய விரும்புகின்றீர்களோ, அவ்விருப்பத்தினைத் திரும்பத்திரும்பக் கூறுங்கள் என்று கூறினார் எமில்கூட என்ற பிரெஞ்சு நாட்டு மனமருத்துவர்.

"நான் உடல் உள ஆரோக்கியம் மிக்கவன்"

"நான் தினம் தினம் முன்னேறி முன்னேறி வருகின்றேன்"

"நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக எனது ஆரோக்கியம் மேன்மை அடைகின்றது."

"நான் மிகவிரைவில் பூரணகுணம் அடைவேன்" என்று பல நோயாளிகளை கூறவைத்து, அவர்கள் மருந்து உட்கொள்ளும் போது, இவ்வாறான "மனமருந்தையும்" ஊட்டி ஊட்டி அவர்களது நோயைக் குணப்படுத்தினார். இதுபோன்ற மனமருந்து அணுகுமுறையினை யாழ்.குடாநாட்டில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் நடைமுறைப்படுத்துகின்றனர்.

அங்குள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கும்பொழுது, அவ்வைத்தியசாலையில் கடமை ஆற்றும் தாதிகள், நோயாளர்களைத் தங்களுடன் பின் வருமாறு கூறும்படி எடுத்தியம்புகின்றனர்.

நோயாளிகளும் விருப்புடன் இவற்றைக் கூறி மிகவிரைவில் குணம் அடைகின்றனர். அவ்வைத்தியசாலைகளின் தாதியர்களும், நோயாளர்களும் ஒன்றிணைந்து கூட்டாக எடுக்கும் கூட்டு மனவளமேம்பாட்டுச் சபதங்கள் இவைகளே.

**நோயாளிகளுக்கு ஏற்ற சபதங்கள்**
**(WELLNESS PLEDGE)**

1. நான் என்றென்றும் நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ்வேன்.
2. நான் மிகவிரைவில் மிகநல்ல பூரண குணமடைவேன்.
3. என்னைக் கவனிப்பவர்கள் மீதும் எனக்கு அளிக்கும் சிகிச்சைகள் மீதும் பூரண நம்பிக்கை பூண்டுள்ளேன்.
4. நான் எப்பொழுதும் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வேன்.
5. நான் எனது உடலை எப்பொழுதும் நேசிக்கின்றேன்.
6. நான் எப்பொழுதும் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கையாளுவேன்.
7. மதுபானம், புகைபிடித்தல் போன்ற தீய பழக்கங்களைத் தவிர்ப்பேன்.
8. போதிய ஓய்வும், உறக்கமும் பெறுவேன்.
9. நான் சுகமானவன், தேகாரோக்கியமானவன், தைரியமானவன், நல்ல எண்ணங்களினால் எனது ஆரோக்கியம் மேன் மேலும் மேம்படுகின்றது.
10. நல் எண்ணங்களே நல் ஆரோக்கியத்திற்கு வித்து.

**கர்ப்பிணித் தாயின் சபதம்**

1. நான் ஆரோக்கியமான ஒருதாய். எனது ஆரோக்கியமே எனது குழந்தையின் ஆரோக்கியம்.
2. எனது வயிற்றில் அழகானதும் ஆரோக்கியமானதுமான குழந்தை வளர்கிறது.
3. நான் எனது குழந்தையை நேசிக்கின்றேன். என்றென்றும் நேசிப்பேன்.
4. எனது குழந்தை விவேகமாக வளர்வதற்கு நல்ல சிந்தனை நிறைந்த நூல்களை வாசிக்கின்றேன். அத்துடன் நல்ல இசைகளையும் கேட்டு ரசிக்கின்றேன்.
5. எனது குழந்தையின் நலனை பேண சிகிச்சை நிலையத்திற்கு ஒழுங்காக வந்து ஆலோசனைகளைப் பெற்று சத்தான குளிசைகளையும் தடுப்பூசிகளையும் உரிய முறையில் பெற்றுக் கொள்வேன்.
6. நான் நிச்சயமாக அழகானதும் ஆரோக்கியமானதுமான குழந்தையை சுகப் பிரசவம் மூலம் பெற்றெடுப்பேன்.
7. எனது குழந்தைக்கு பிறந்ததிலிருந்து 6 மாதம் முடிவடையும் வரை தனித் தாய்ப்பால் மட்டுமே கொடுப்பேன்.
8. எனது குழந்தைக்கு உரிய வயதுகளில் உரிய தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பேன்.
9. எனது குழந்தை எதிர்காலத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்று எண்ணுவேன். இவ் எண்ணங்கள் எனது குழந்தையின் ஆரோக்கிய எதிர்காலத்திற்கு அவசியம்.

**சுகப்பிரசவச் சபதம்**

1. நான் என்றும் சுகதேகியாக வாழ்வேன்.
2. எனது குழந்தை என் வயிற்றில் ஆரோக்கியமாக வளர்கின்றது.
3. எனது குழந்தை ஆரோக்கியமாகவும் சுகதேகியாகவும் வளர்வதற்கு நல்ல ஊட்டச் சத்துக் கொண்ட உணவுகளை உட்கொண்டு வருகின்றேன்.
4. எனது குழந்தை ஆரோக்கியமாக வளர்வதற்கு நானே சில பயிற்சிகளைக் மேற்கொண்டு வருகின்றேன்.
5. எனது நல்லெண்ணங்களும் நல்ல சிந்தனைகளும் எனது குழந்தையின் மன வளர்ச்சிக்கு மிகமிக அவசியமாகும்.
6. என்னால் இந்தக் கர்ப்பகாலத்தை மிகவும் மகிழ்ச்சிகரமான ஒன்றாக மாற்றி மகிழ்வுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.
7. என்னால் ஒரு இலகு சுகப்பிரசவம் ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று உறுதி கொண்டுள்ளேன்.
8. என்றும் நான் ஒரு ஆரோக்கியமான கர்ப்பிணித்தாயாக உள்ளமையினால் நானே என் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டி ஒரு நல்ல பிரஜை ஒன்றை எதிர்காலத்தில் நாட்டிற்கும் வீட்டிற்கும் பயன்பெறும் உத்தம புத்திரரை பெற்றெடுப்பேன்.

**சிறு குழந்தையுடைய தாய்மார்கள் கூற வேண்டிய சபதங்கள்**

1. எனது குழந்தை எனக்கும் எனது குடும்பத்திற்கும் விலைமதிக்க முடியாத சொத்து. நான் இன்றும் என்றும் அதனை பேணிப்பாதுகாப்பேன்.
2. எனது குழந்தையை அன்புடன் அரவணைப்பேன். தாலாட்டி, பாலூட்டி, பாராட்டி, சீராட்டி வளர்ப்பேன்.
3. ஒழுங்காக கிளினிக் சென்று தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொடுப்பேன்.
4. ஆறுமாதம் வரை தாய்ப்பால் மட்டும் கொடுப்பேன். 7 ஆம் மாதத்திலிருந்து திட உணவுகளை கொடுத்து தேக ஆரோக்கியமுடைய மனமகிழ்வுள்ள குழந்தையாக வளர்ப்பேன்.
5. தனிநபர் சுகாதாரத்தை பேணுவேன். எனது குழந்தையின் ஆளுமையை அதிகரிக்க விருத்தி செய்ய உகந்த வீட்டுச் சூழலை ஏற்படுத்துவேன்.
6. குழந்தையோடு பேச, பழக, விளையாட நானும் எனது குடும்ப அங்கத்தவர்களும் நேரம் ஒதுக்குவோம்.
7. நான் என் குழந்தையை நல்லொழுக்கமுள்ள, ஆரோக்கியமுள்ள, புத்தி சாதுர்யமுள்ள பிள்ளையாக உருவாக்குவேன்.
8. குழந்தைக்கு 3 வயது நிரம்பிய பின்னரே இன்னொரு குழந்தையைப் பெற்றெடுப்பேன்.

# குருவின் பார்வையில்

உங்களுக்கென ஒரு குழந்தை பிறந்துவிட்டால், அதற்கு பலவற்றையும் சொல்லித்தர வேண்டும், சொல்லித்தர வேண்டும் என்ற ஆர்வம் எல்லோருக்கும் இருக்கிறது. நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், வீட்டில் ஒரு குழந்தை இருந்தால், அது நமக்குக் கற்றுக் கொள்ளும் நேரம். கற்பிக்கும் நேரமல்ல. ஏனென்றால், மனிதன் தன் வாழ்வில் எதைச் செய்திருந்தாலும்சரி, கல்வியைத்தேடிப் போயிருந்தாலும், தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், ஆன்மீகத் தேடுதலில் இருந்தாலும் இவற்றையெல்லாம் எதற்காக நாம் செய்கிறோம்? ஆனந்தமாக இருக்கமுடியும் என்ற அடிப்படை நோக்கத்தில் தானே இவற்றைச் செய்கிறோம். இந்த நோக்கத்தில்தானே குடும்பத்தையும் உருவாக்கிநீர்கள், குழந்தையும் வந்தது. ஆனால், உங்களையும் உங்கள் குழந்தையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், உண்மையில் யார் அதிக ஆனந்தமாக இருக்கிறார்கள். நிச்சயமாக உங்கள் குழந்தை தான் உங்களைவிட ஆனந்தமாக இருக்கிறது. அப்படியானால், யாரைப் பார்த்து வாழ்க்கையைப் புரிந்து கொள்ள வேண்டும்? உங்களையா அல்லது உங்கள் குழந்தையையா?

ஒரு குழந்தைதான் உயிர்தன்மையோடு ஒத்து வாழ்கிறது. ஆனால், நீங்கள் பல காரணங்களால் உயிர்த் தன்மையோடு ஒத்திசைவாய். வாழும் நிலையினை மறந்து விட்டீர்கள். எனவே, நம் வீட்டில் ஒரு குழந்தை பிறந்து விட்டால், அதற்கு நீங்கள் ஏதோ சொல்லித் தரவேண்டும் என்ற அவசியம் இல்லை. உடல் நிலையில் குழந்தை ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அது வாழும் சூழ் நிலையை அன்பாகவும் ஆனந்தமாகவும் அமைத்துத் தரவேண்டும். அப்படியிருந்தால், குழந்தை தானாகவே நன்றாய் வளரும்.

## குழந்தை வளர்ப்பு

தோட்டத்தில் ஒரு செடியை வளர்க்க வேண்டும் என்றால், அதன் அருகே சென்று அமர்ந்து அதனை நீட்டி நீட்டிப் பார்த்தால் செடி வளர்ந்து விடுமா? தேவையான சூழ் நிலையை உருவாக்கினால், அது தானே வளரும். ஊட்டச் சத்துள்ள மண்ணும், தண்ணீரும் சூரிய ஒளியும் கிடைக்குமாறு செய்தால் அந்தச்செடி தானாய் வளரும். அதே போல் குழந்தை வளரவும் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அச்சூழ்நிலையை உருவாக்காமல் நீங்கள் எவ்வளவுதான் முயற்சித்தாலும் எதுவும் நிகழாது. குழந்தையின் வளர்ச்சியில் அக்கறையுள்ள பெற்றோர், வீட்டில் எத்தகைய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்? பயமும் பதற்றமும் போட்டமும் நிறைந்த வீட்டில் குழந்தை எப்படி ஆனந்தமாக வளரும். ஒரு குழந்தையைச்சுற்றி எத்தகைய சூழல் நிலவுகிறதோ அதற்கேற்ற குழந்தையாகத்தான் வளரும். எனவே அன்பான, அமைதியான, ஆனந்தமான சூழ் நிலையை உருவாக்குவது பெற்றோர்களின் அடிப்படையான பொறுப்பு.

13' ஆம் நூற்றாண்டில் மாட்டின் லூதர்கிங் என்றொருவர் இருந்தார். இவர்தான், கிறிஸ்தவ மதத்தை இரண்டாகப்பிரித்தவர். ஒரு நாள் அவர் மிகவும் சோகமாக மன அழுத்தத்தோடு அமர்ந்திருந்தார். அவர் மனைவி மிகவும் புத்திசாலியான பெண். மார்ட்டினின் நிலையைப் பார்த்தவர் என்ன செய்தாரென்றால், வீட்டிற்குள்ளே சென்று ஒரு கறுப்பு அங்கியை முழுமையாக அணிந்து கொண்டு, வெளியே வந்தார். இதைப் பார்த்த மார்ட்டின் "என்ன இது கறுப்புத் துணியை அணிந்து வந்திருக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு மாட்டினின் மனைவி, "கடவுள் இறந்துவிட்டார். அந்தத்துக்கத்தின் அடையாளமாக கறுப்புத் துணியை அணிந்திருக்கிறேன்" என்றார். மார்ட்டின் லூதர்கிங், "கடவுள் எப்படிச் சாக முடியும்?" என்றார். அவர் மனைவி "கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இன்னும் இருந்தால், நீங்கள் ஏன் சோகமாய் இருக்கிறீர்கள்? அதற்கு என்ன தேவை வந்தது?" என்று கேட்டார். அப்போது தான் மார்ட்டின் தன் நிலையை உணர்ந் தார். துயரமும், பாதிப்பும், பதற்றமும் பிசாசின் செயல்கள் இவை நம்முள் இருக்கும் கடவுள் தன்மையின் செயல்களல்ல. நம் உள் இருக்கும் நம் உருவாக்கத்தின் அடிப்படைச் சக்தியைத்தான் கடவுள் என்கிறோம். அந்த சக்தி நம்முள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் செயல் நம்முள் நிகழ்ந்து கொண்டிருக்கும்வரை துயரத்திற்கும் சோகத்திற்கும் பாதிப்பிற்கும் காரணங்கள் இல்லை.

நம் குழந்தை நன்றாக வளர வேண்டுமென்றல், முதலில் நாம் எப்படி நன்றாக இருப்பது என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். நமக்கே இது புரிய வில்லையென்றால், குழந்தைக்கு எப்படிக் கற்றுத்தர முடியும். ஆனந்தமாக இருப்பது எப்படியென்பது குழந்தைக்கு நன்றாகவே தெரியும். ஆனால், வாழ்ககையை நிகழ்த்த, பிழைப்பதற்கான வழிமுறைகளை மட்டுமே நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். பொருளாதாரச் சூழல் இதில் முக்கியமில்லை. அன்பான, ஆனந்தமான ஒரு சூழலை நம்மால் உருவாக்க முடியும் என்றால் மட்டுமே ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதி மனிதனுக்கு இருக்கிறது.

மகிழ்ச்சியில்லாத மனதர்களை உருவாக்கி இந்த உலகில் உலவவிடுவது மிகப்பெரும் குற்றம். இது மனித குலத்

## ஆன்மீகம் 22

துக்கு நேரும் மிகப்பெரும் தீங்கு. இந்தக் குற்றத்தைப் பலரும் செய்கிறார்கள். இந்த சூழல் நிச்சயமாக மாற்றப்படவேண்டும். என மாமியர் இப்படி இருக்கிறாரே, என் மனைவி இப்படி இருக்கிறாளே, அண்டை வீட்டார் அப்படி இருக்கிறாா்களே என பலவிதமான காரணங்கள். ஆம், அவர்கள் அப்படித்தான்.

உங்கள் ஆனந்தத்தை வெளியில் இருக்கும் சூழ்நிலையைக்கொண்டு உருவாக்க நினைத்தால், அது நிகழாது. வெளிச் சூழ்நிலை 100% நாம் நினைத்தபடி நடப்பதில்லை. ஆனால், உள் சூழலை நமக்கு எப்படித் தேவையோ அப்படி உருவாக்கிக் கொள்ள முடியும். அதற்கான கருவியையே நாம் யோகா என்கிறோம். மனிதன் தன் உள்நிலையிலேயே பேரானந்தத்தை உணர்வதற்கான விஞ்ஞானமே யோகா. ஒவ்வொரு மனிதனும் அவனது நன்மையை மட்டுமன்றி, அடுத்த தலைமுறையின் நன்மையையும் இதன் மூலம் உணர வேண்டும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும் 02

இராகம் மத்தியமாவதி-

நெல்லுக் குத்துற பெண்ணே
சும்மா பாக்கிறா என்னே
புருசன் வாரன் பின்னே
புழுங்கல் குத்தடி கண்ணே

இதே மாதிரிக் காதல் பாடல்களும் உண்டு.

இராகம் ஹரஹரப்பிரியா

வெள்ளிலை ஓரத்திலே வெண்ணெய் கொண்டு போற பெண்ணே
வெண்ணெய் உருகுதடி உன் வெள்ளி முகம் தோணுதடி
சோளம் விதைக்கையிலேசொல்லி விட்டுப்போனவரே
சோளம் பயிராச்சு நீங்க சொன்ன சொல்லு என்னாச்சு

இதே மாதிரி வேதாந்தப் பாடல்களும் அக்காலத்திற் பாடப்பட்டதற்கு சான்றுகள உண்டு.

இராகம் நாத நாமக்கிரியை

அஞ்சு கல்லால் உரு கோட்டை - அந்த
ஆனந்தைக்கோட்டைக்கு ஒன்பது வாசல்
நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி- அதைக்
கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத் தாண்டி

அடுத்ததாகத் திருமண விழாவில் மணமக்களை வாழ்த்திப் பாடப்படும் பாடல்களும் இராகம் கூறப்பட்டுப் பாடப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இராகம் சாருகேசி

வெள்ளிக்கிழமை அன்று வீடு வாசல் சுத்தம் பண்ணி
தங்கப் புருசன் அவன் தாலிகட்ட வாரானாம் சோ...சோ...
காசே கொடுத்தமின்னு காசே கொடுத்த மின்னு
காசு எங்கப்பன் போட்ட காதணிக்கே காணாது சோ...சோ...

அடுத்து கும்மிப்பாடல்

இராகம் ஆனந்தபைரவி

வாங்கடி வாங்கடி தோழிப் பெண்கள்- வள்ளி
மாமயில் பாட்டைப் பாடுங்கடி
கானல் இருந்த மாமயில் கந்தன்
கண்ட கதையைப் படியுங்கடி

இவ்வகையான நாட்டார் பாடல்களில் கர்நாடக சங்கீதத்தின் தொன்மையான இராகங்கள் பின்னிப் பிணைந்து கிடப்பது ஒரு கலை அற்புதமாக இருக்கிறது.

சங்கீதத்தைப்பற்றிச் சான்று பகரும் முதல் இசை இராவணன் என்னும் அரசனது காலமாகும். இராவணன் மிகுந்த சிவபக்தன், இவன் யாழ் வாசிப்பதிலும் வல்லவன் எனவும் இலக்கியம் சான்று பகருகிறது.

இராவணன் கைலாய மலையில் அகப்பட்டு நாற்பெரும் பண்ணை, வீணையில் வாசித்து விடுபட்ட செய்திமூலம் இவன் சிறந்த சங்கீத ஞானமுடையவன் எனத் தெரிய வருகிறது.

தென்னாட்டை அரசாண்டு வந்த இராவணன் பலருக்கு அதாவது மக்களுக்கு பெரும் துன்பம்செய்து வந்தான். அவனை வெற்றி கொள்ளத் தீர்மானித்தார் அகத்திய முனிவர். இருவரும் இதற்குச் சம்மதித்து இசையால் பொதிய மலைக்கல்லை உருக்குபவரே வென்றவர் என ஒப்புக்கொண்டனர். அகத்திய முனிவரின் இசைக்கு பொதிய மலை உருகியது. அதன் பின் இராவணனின் இசை தொடங்க உருகிய பாறை கற்குழம்பாக இறுகியது. இதனைத் தொல்காப்பியம் "பொதியின் கண்ணிருந்து இராவணன் கந்தருவத்தாற் பிணிந்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலகினார்" என்கிறது. இதனையே கோணசர மாலை இப்படிக் கூறுகிறது. "இனிய பைந்தமிழின் பொதிய மால்வரை போலி

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

சைக் குருகாது." இச்சான்றிலிருந்து இராவணன் காலத்தில் சங்கீதம் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

அடுத்த காலமாகிய வரலாற்றுத் தொடக்கமான சங்ககாலத்தில் இசை மிகவும் சிறந்த நிலையில் இருந்தது என்பதை தொல்காப்பியம் எடுத்துக் காட்டுகின்றது இதில் கருப்பொருளாக ஐந்துவகை நிலத்திற்கும் ஐவகை யாழினையும் ஐவகைப் பாறைகளையும் அக்காலத்தவர் வகுத்துள்ளமையையும் காணலாம். பாண்டிய மன்னர் காலத்தில் மதுரை முதற் சங்கதினால் இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் சிறப்புற வளர்க்கப்பட்டன என சிலப்பதிகாரம் கூறுகின்றது. தொல்காப்பிய நூல் தோன்றுவதற்கு முன்பே வகைவகையான கலிப்பாடல்கள், தேவபாணி, தரவு, தாழிசை, வெண்பா, ஆசிரியம், பண்ணத்தி, முதலிய இசைப்பாடல்கள் வளர்ந்து செழித்திருந்தன. உதட்டின் ஒலி அசைவு,ஒலியின் தோன்றலை வகைப்படுத்தி உறுப்பியல் என்னும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் பாணர், கூத்தர், பாடினி, விறலி ஆகியோர் இசையிலும் கூத்திலும் திறமையுடையவர்கள் என இலக்கியம் சுட்டுகின்றது. இக்காலத்தில் இயற்கையின் ஒலிகளைக்

**திருமதி மலர்விழி கனகசபை**

கொண்டே அறிவின் திறத்தால், மனிதன் பல புலமைகளை ஒட்ட முற்படுகிறான். குழல், முழவு, யாழ் என்பவற்றைக் கண்டதில் இயற்கை உதவியிருப்பதனை பரிபாடல்வரிகள் மிக அழகாகச் சுட்டுகின்றன.

(தொடரும்)






யாழ்.வேலணை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் அழைத்து வரப்படுவதையும் விருந்தினரின் பாரியார் திருமதி இ.கிருபாகரி வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதாளவுலகினரின் கூலிப்படைகள்

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)



பொலிஸாரும் இராணுத்தினரும் பாதாள உலகக் குழுக்களின் கூலிப்படையாக மாறியுள்ளனர் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார். நாம் இருந்த காலத்தில் சீரிய ஒழுக்கத்துடன் பொலிஸாரும் இராணுவத்தினரும் கடமையாற்றினர்.

தற்போது பாதாள உலகக் குழுக்களின் ஒப்பந்தங்களை பொலிஸாரும் படையினரும் நிறைவேற்றுகின்றனர்.

இராணுவத் தளபதி போர் புரியவில்லை. போரை நாமே திட்டமிட்டு நடத்தினோம் என மார்தட்டி கொண்டவர்களினால் பாதாள உலகக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் விநியோகத்தை கூட கட்டுப்படுத்த முடியவில்லை.

படுகொலைச் சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை.

பெட்டிக் கடைகளை உடைக்கவும் வடிகால்களை சுத்தப்படுத்தவுமே இவர்களினால் முடிகின்றது என முன்னாள் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு சிகிச்சைக்காக சென்றிருந்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.(2)

# கொழும்பு மாநகரசபையில் ஆளும்-எதிர்க்கட்சி முறுகல்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் முறுகல்கள் வெளிப்படையாக ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே. எம். முஸம்மிலின் எதிர்ப்புக்கு மத்தியிலும் மாநகரசபையில் எதிர்க்கட்சி அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இதனை ஆட்சேபித்து முஸம்மில் மாநகர ஆணையாளருக்கு ஏற்கனவே கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இலங்கையின் உள்ளூராட்சி சபை சட்டத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி கிடையாது.

இந்த நிலையில் கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சி அலுவலகம் திறக்கப்பட்டமை சட்டத்துக்கு புறம்பான செயல் என்று முஸம்மில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மாநகர சபைக்கான புதியவர்களின் நியமனங்களை மாநகர முதல்வர் வழங்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அதனை நிறுத்துமாறும் அது உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மேல்மாகாண ஆளுநரும் ஆளும் அரசாங்க கட்சியின் தொழிற்சங்க தலைவருமான அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கொழும்பு மாநகர சபை விடயத்தில் இலங்கையின் ஆளும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் முறுகல்கள் வெளிப்படையாக ஆரம்பித்துள்ளன. (2)

# சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார் துமிந்த

(கொழும்பு)

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த துமிந்த சில்வா வைத்தியசாலையிலிருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் 8.30 மணியளவில் துமிந்த சில்வாவை வைத்தியசாலையிலிருந்து விடுவித்ததாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உறவினர்களின் வேண்டுகோளுக்கு அமைய இவ்வாறு விடுவிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சசேந்திரா கமகே தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையிலிருந்து வெளியேறிச் செல்லக் கூடிய நிலையில் துமிந்தவின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்கு அனுமதி யளிக்குமாறு துமிந்தவின் உறவினர்கள் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கோரியதாகக் குறிப்பிட்டுள்ளார். (2)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதலில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்



## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் முதலில் பேச்சுவார்த்தை நடத்த வேண் டுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுடன் உள்ளகப் பிரச்சினையை பேசுவதற்கு முன்னர் அரசாங்கத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தை நடத்துவதே பொருத்தமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு தீர்வுத்திட்டமும் உள்நாட்டுக்குள்ளேயே முன்வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். உள்விவகாரப் பிரச்சினைகளை வெளிநாடுகளில் பேசுவதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நேரடியாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தும் தரப்பினர் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். (2)

# படையினர் கைது செய்த இளைஞர் 13 வருடத்தின் பின்னர் விடுதலை

(கொழும்பு)

படையினர் வசம் சிக்கியிருந்த வீட்டினைப் பார்வையிடச் சென்ற வேளை படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் 13 வருடங்களின் பின்னர் குற்றமற்றவரென நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் படையினால் கைது செய்யப்பட்ட கிளிநொச்சி இளைஞரே 13 வருடங்களின் பின் கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி திருநகர் தெற்கைச் சேர்ந்த நவரத்தினம் பாலசிறி என்ற இளைஞரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

1998 ஆம் ஆண்டு மாங்குளம் மூன்றுமுறிப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டிருந்ததாக நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர் காலி மற்றும் யாழ். சிறைச்சாலைகளில் விளக்கமறியலிலும் இறுதியாக பூசாவிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு விசாரணை கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது.

மேற்குறிப்பிட்ட நபரினால் கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் யாழ். மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கை விசாரணை செய்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சு.பரமராஜா இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார். (2)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுசபைக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மூளாய் வீதியில் மாவடிச் சந்தியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை பால் கொள்வனவு நிலையத்தில் தலைவர் இ.கு.சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் புதிய அங்கத்தவர்களை அங்கீகரித்தல், செலவீனங்களுக்கான அங்கீகாரம் பெறல், இலாபம் பகிர்வுக்கான அங்கீகாரம் பெறல் ஆகியவை இடம் பெறவுள்ளதாக செயலாளர் வே.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (2)

# முதலாளித்துவ கட்சிகளின் கூட்டால் அடையாளங்களை இழக்கின்றது ஜே.வி.பி

2004 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டமையை ஓர் பாரிய தவறாக கருதுவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

கட்சியின் அடையாளங்களை விட்டுக் கொடுத்து 2004 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி சேர்ந்தமை பாரிய அரசியல் தவறாகும் என சுட்டிக் காட்டியுள்ளது.

போதியளவு தெளிவு மற்றும் நோக்கமின்றி நெருக்கடி நிலைமைகளிலிருந்து மீள முடியாது என ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது செயற்பட்டு வரும் இடதுசாரி கட்சிகள் வலுவான நிலையில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சோசலிச சமூகங்களுக்கு கடந்த 1965 ஆம் ஆண்டு ரோஹண விஜேவீர அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நாட்டை தாரை வார்த்துக் கொடுக்க முயற்சித்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி கூட்டு சேர்ந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தேசத்தை பாதுகாக்கும் நோக்கில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்ள நேரிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். சூழ்நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் அரசியல் கூட்டணிகளை வைத்துக் கொள்வதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே கடந்த 2005 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் 2010 ஆம்ஆண்டு சரத் பொன்சேகாவிற்கும் ஜே.வி.பி.ஆதரவளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் முதலாளித்துவ கோட்பாடுகளை பின்பற்றும் அரசியல் கட்சிகளுடன் கூட்டு சேர்வதன் மூலம் ஜே.வி.பியின் தனித்துவ அடையாளங்கள் இழக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக இழைக்கப்பட்ட தவறுகளை ஒப்புக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## த.தே.கூ. இன் தீர்வுக்கான முயற்சிக்கு கனடா காத்திரமாக பங்களிக்கும்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தற்போது முன்னெடுக்கப்படும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான முயற்சிக்கும் இலங்கைத் தீவின் சமூகங்களிடையேயான மீள ஒன்றியணையும் முயற்சிக்கும் கனடா என்றுமே காத்திரமான பங்கை வழங்கும் என கனேடியத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறப்பட்டுள்ளது.

கனடாவினால் உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்ட முதலாவது விஜயமாக அமைந்த இந்த விஜயத்தின் போது கனடாவின் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் இராஜதந்திரகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதுடன் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான நிறைவேற்றுக்குழுக்களில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதானிகளையும் மேற்படி குழுவினர் சந்தித்தனர்.

கனடாவில் இரண்டு நாட்களே தங்கியிருந்த இக்குழுவினர் ஒரு தினத்தை மேற்படி கனேடியத் தலைநகர் சந்திப்புக்களில் செலவளித்தனர்.

மேற்படி குழுவினர் உத்தியோகபூர்வ சந்திப்புக்கள் முடிந்த பிற்பாடு ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் தமிழர்களுக்கான குரலாகச் செயற்பட்டு வரும் கன்சவேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர் பற்றிக் பிரவுன் மற்றும் ஈழத்தமிழர்களுக்கு பரிச்சயமான பாராளுமன்ற உறுப்பினரான பார்ம் கில் ஆகியோருடன் கனேடிய மனிதவுரிமை மையத்தால் செய்யப்பட்ட சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இலங்கை மனிதவுரிமைக்கு எதிரான செயலுக்குத் தாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றும் தமிழர்களுக்கு சமாதான முறையிலான தீர்வொன்றிற்கான அழுத்தத்தைக் கொடுப்போம் என்றும் தெளிவுபடக்கூறினர்.

கனேடிய மனிதவுரிமை மையத்தால் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தோடு லிபரல் கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போதும் அமெரிக்காவிற்கு திரும்பிச் செல்ல விருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கான நேரப்பற்றாக்குறை காரணமாக அச்சந்திப்புக்கள் இடம் பெறவில்லை. (2)

## டுபாயில் கணனி திருடிய இலங்கை இளைஞன் கைது

(டுபாய்)

டுபாயில் பொறியியல் அலுவலகமொன்றிலிருந்து நான்கு மடிக் கணனிகளை திருடியதாகவும் மேலும் 18 மடிக்கணனிகளை திருட முயன்றதாகவும் இலங்கையைச் சேர்ந்த சுத்திகரிப்பு ஊழியர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

20 வயதான இந்நபர் ஜூலை 21 ஆம் திகதிக்கு சில தினங்களுக்குமுன் நான்கு கணனிகளை எடுத்துச் சென்றதுடன் பின்னர் மீண்டும் பல கண்ணிகளை எடுக்க முயன்றதாகவும் அவற்றை ஒளித்துவைத்த போது அவர் அகப்பட்டதாகவும் டுபாய் நீதிமன்றமொன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சந்தேக நபரின் கடமை நேரத்தின்போது 22 எச்.பி. மற்றும் டொஷிபா ரக் கணனிகள் காணாமல் போனதாக புகாரிடப்பட்டதாக அந்நிறுவனத்தின் பாதுகாப்பு பொறுப்புதிகாரி கூறியுள்ளார்.

இச்சந்தேக நபர் 2 கணனிகளை தனது வீட்டிற்குக் கொண்டு சென்றதாகவும் மேலும் இரு கணனிகளை, மென்பொருட்களை உட்புகுத்துவதற்கான கண்ணி கடையொன்றுக்கு கொண்டு சென்றதாகவும் ஒப்புக் கொண்டதாக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வாக்குமூலம் அளித்தார். ஏனைய கணனிகளை கூரையொன்றில் மறைத்து வைத்ததாக நபர் ஒப்புக் கொண்டதாகவும் அவர் கூறினார். இவ்வழக்கின் தீர்ப்பு நவம்பர் 22 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. (எ-9)

## குறைந்த வருமானத்தினர், முச்சக்கரவண்டி சாரதிகளை ஐ.தே.க.காப்பாற்றும்

கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தேவையின்றி தலையீடு செய்தால் மக்களின் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியேற்படும் என ஏ.ஜே.எம். முஸம்மில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுபேற்றுக் கொண்டார்.

மதவழிபாடுகளின் பின்னர் முஸம்மில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

மக்களினால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம் கொழும்பு மாநகரசபையை முழு அதிகாரத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்வதற்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

குறைந்த வருமானம் ஈட்டுவோர் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் உள்ளிட்ட அனைத்து மக்களையும் ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமானம் ஈட்டி வரும் மக்களின் வீடுகளை உடைக்கவும் தலைநகர் கொழும்பிலிருந்து முச்சக்கர வண்டிகளை இல்லாதொழிக்கவும் சில சக்திகள் முயற்சிப்பதாகவும் இதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (2)

## 2011.11 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1493-கரீபியன் கடலில் டொமினிக்கன் தீவை முதன்முதலில் கொலம்பஸ் கண்டார்.

★ 1655-பிரான்சும் இங்கிலாந்தும் இராணுவப் பொருளாதார ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★ 1812-நெப்போலியனின் இராணுவத்தினர் வியாஸ்மா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்றனர்.

★ 1838-மும்பை டைம்ஸ் முதன் முதலில் வெளியிடப்பட்டது. இது பின்னர் 1861 இல் டைம்ஸ் ஒப் இந்தியா எனப் பெயரிடப்பட்டது.

★ 1903-ஐக்கிய அமெரிக்காவின் தூண்டுதலை அடுத்து பனாமா கொலம்பியாவிடம் இருந்து தனது விடுதலையை அறிவித்தது.

★ 1905-ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலஸ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க உத்தரவிட்டான்.

★ 1913-ஐக்கிய அமெரிக்கா வருமான வரியை அறிமுகப்படுத்தியது.

★ 1918-போலந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1943-இரண்டாம் உலகப்போர்: ஜேர்மனியின் வில்ஹெம்ஷாஃபென் துறைமுகத்தை அமெரிக்காவின் சுமார் 500 போர் விமானங்கள் தாக்கி அழித்தன.

★ 1957-உலகில் முதன்முதலில் மிருகம் ஒன்றை (லைக்கா என்னும் நாயை) சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக் 2 விண்கப்பலில் விண்வெளிக்கு அனுப்பியது.

★ 1963- தி.மு.க. செயற்குழு திராவிட நாடு, தனிநாடு கோஷத்தைக் கைவிடுவதாக அறிவித்தது.

★ 1963-ஜெய்ப்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் மாநாட்டில் காமராசர் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1964-வோஷிங்டன் டீசி மக்கள் முதன் முறையாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்கள்.

★ 1970-சல்வடோர் அலெண்டே சிலியின் ஜனாதிபதியானார்.

★ 1973- நாசா மரைனர் 10 என்ற விண்கப்பலை புதன் நோக்கி அனுப்பியது. 1974 மார்ச் 29 இல் அக்கோளை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1978-டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றது.

★ 1979-கம்யூனிச பாட்டாளிகள் கட்சியில் 5 உறுப்பினர்கள் வெள்ளையின மேலாதிக்கவாதிகளால் சுடப்பட்டு உயிரிழந்தனர்.

★ 1982-ஆப்கானிஸ்தானில் சலாங் சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 2ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1986-மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1618-ஔரங்க சீப், இந்தியாவின் மொகலாய சக்கரவர்த்தி (இ.1707)

★ 1795-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11ஆவது குடியரசுத் தலைவர் (இ.1849)

★ 1911-ஏ.கே.செட்டியார், தமிழில் பயண இலக்கியத்தின் முன்னோடி (இ.1983)

### இறப்பு


★ 2006-ஈ.வி.சரோஜா, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1935)

### சிறப்பு நாட்கள்

★ பனாமா- சுதந்திரதினம் (1903)

★ டொமினிக்கா- சுதந்திரதினம் (1978)

★ மைக்குரோனீசியா கூட்டு நாடுகள்- சுதந்திரதினம்.



★ 1933-இந்தியப் பொருளாதார நிபுணரும் நோபல் பரிசு பெற்றவருமான அமிர்த்தியா சென் பிறந்ததினம்.

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

6

கைது செய்யப்பட்ட போது என் மனைவி நளினி 50 கிலோ எடை இருந்தார். நான் 60 கிலோ. இரண்டு மாதக் கர்பிணியாக "மல்லிகை"யின் குரூர அறைக்குள் அடி எடுத்து வைத்த நளினி அடுத்த இரண்டு மாதங்கள் கழித்து ஜூடிஷியல் கஸ்ரடியில் சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். அப்போது நளினியின் எடை எவ்வளவு தெரியுமா? வெறும் 35 கிலோ. 15 கிலோ எடைகுறைகின்ற அளவுக்கு சித்திரவதைகள் குரூரமாகவும் கொடுமையாகவும் இருந்தன. நான் சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட போது, வெறும் 30 கிலோ தான் இருந்தேன். பாதியாக என்னை கழித்து, வெறி தீர்த்தார்கள். வெறும் வார்த்தைகளுக்காக இதை நான் சொல்லவில்லை. ராஜிவ் வழக்கில் நாங்கள் வளைக்கப்பட்ட போது எவ்வளவு எடை இருந்தோம். சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட போது எந்த அள்வுக்கு எடை குறைக்கப்பட்டு இருந்தோம். என்பதற்கு அரசுதரப்பு குறிப்புக்களே ஆதாரமாக இருக்கின்றன. **பிரிசன் அட்மிஷன் ரெஜிஸ்டரில்** எங்களின் எடை அளவு குறைக்கபட்டு உள்ளது. மல்லிகை விசாரணைகளுக்குப் பிறகு சப்பி எறியப்பட்ட மாங்கொட்டையாகத் தான் நாங்கள் சிறைக்குள் தள்ளப்பட்டோம். கைதுக்கு முன் நாங்கள் எடுத்துக் கொண்ட புகைப்படமும், பொலீஸ் காவலின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஒப்பிட்டு பார்த்தாலே, நாங்கள் எப்படி எல்லாம் சிதைக்கப்பட்டோம் என்பது புரியும்.

ராஜீவ் கொலை வழக்கில் நான் வளைக்கப்பட்ட போது, வாழைக்

## அனுதினமும் அலறல்...!

குருத்து வயது. கோபம் பொறுக்காத ஆவேசம் பொங்கி எழுகிற வயது. மல்லிகை அலுவலகத்தில் நடந்த கொரூரங்கள் என் வயதுக்குரிய கோபத்தையும் ஆவேசத்தையும் பொசுக்கிப் போட்டது என்ன செய்தாலும் தாங்கிக் கொள்ளக்கூடிய சொரனையற்ற மனப்பக்குவத்தை பழக வைத்தது. "கத்திக் கதறினாலும் யாருக்குமே கேட்காது" என்கிற கையறு நிலையை என் நாடி நரம்புகள் பழகிக் கொண்டன. மரணத்தை விட கொரூரமானது மரணபயம் என்பதை நினைத்து நினைத்து என் அனு தினங்கள் அலறத் தொடங்கின.

இரவானால் தூக்கம் வராது. அதிகாரிகள் கயிற்றோடு துரத்துவதைபோல் இருக்கும். எங்கேயோ தப்பி ஓடுகிற என்னை சுலபமாக அதிகாரிகள் வளைத்து விடுவது போல் கனவு வரும். தூக்குக் கயிற்றின் முன்னால் என்னை நிறுத்திய அதிகாரிகள் கைகொட்டிச்சிரிப்பது கனவாக விரியும். கனவிற்கூட துயரத்தின் துரத்தல்களையே அனுபவித்த அபாக்கியவான் நான். என் வடுக்களையும் வருத்தங்களையும் இங்கே இறக்கி வைக்கிற நேரத்தில், சிறு ஆறுதலை என் சிறகுகள் சுமப்பது போன்ற நின்மதி!

சில தினங்களுக்கு முன் வேலூர் சிறையில் என்னைப் பார்க்க ஒருவர் வந்தார். மிக இளம் வயதுக்காரரர். "ஜூ.வி-யில் உங்களைப் பத்திப் படிச்சேண்ணா... தாங்க முடியலை. இப்படி எல்லாம் குரூர அதிகாரிகள் செயற்பட்டதை நம்பவே முடியலை. இவ்வளவு சித்திரவதைகள் கடந்து நீங்க நிற்கிறதைப் பார்க்கிறப்ப, ஏதோ மறுஜென்மம் மாதிரி இருக்கு!" என்றார் கலங்கிய கண்களோடு. நான் இறக்கி வைப்பது வெளியே சொல்லக்கூடிய துயரங்களை மட்டுமே. சொல்ல முடியாததை, எழுத்தில் வார்த்தால் இன்றைக்கும் ஈரக்குலையைத் துடிக்க வைக்கும் கோரங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைப் பற்றி நினைத்தாலே,என்னுடைய சிறு நின்மதியும் சிதைந்து போகும். ராஜிவ் கொலை வழக்கின் புலனாய்வின் போது மொத்தமாக 35 • பேர் வரையில் தற்கொலை செய்து கொண்டனர். அதிகாரிகளின் சித்திரவதைகளுக்கு ஆளாவதைக் காட்டிலும் இறப்பதே மேல் என எண்ணியதால் தானே இத்தனை தற்கொலைகள்?


ஒவ்வொரு நாள் உறக்கத்திலும் எம்மை வருத்துகிற கேள்வி ஒன்று உண்டு. குற்றச் சதிக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பது எங்களை விசாரித்த அதிகாரிகளுக்கு நன்றாக தெரியும். அப்படி இருந்தும் எங்களைச் சிக்க வைக்க அவர்கள் இவ்வளவு வெறித்தனம் காட்டியது ஏன்? எங்களைப் பலிக்கடாவாக்க அவர்கள் இந்த அளவுக்கு போராடியது ஏன்? ராஜிவ் என்கிற மாபெரும் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் குற்றவாளிகள் யாரையும் பிடிக்க இயலாமல் போனது அவர்களுக்கு பெரும் அவமானமாகிவிட்டது. அவர்களின் தேடுதலுக்கு நாங்கள் தீனியாகிப் போனோம். அவர்களுடைய வெறித்தனமான விளையாட்டுக்கு எங்களின் முதுகுகள் தோதான களமாகிவிட்டன.

இந்த விவகாரத்தில் தடா வழக்கின் கீழ் பொலீஸ் அதிகாரிகளால் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் இல்லை என்றால், யாரையும் ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் தண்டித்திருக்க முடியாது. ஒப்புதல் வாக்குமூலங்கள் வாங்கப்பட்ட பின்னணியை அறிந்தவர்களாகச் சொல்லுங்கள்... இந்த விவகாரத்தில் நாங்கள் பலிக்கடாவாக்கப்பட்டதை உங்களால் உணரமுடிகிறதா? சித்திரவதைகளும் குரூரங்களும் தான் எங்களைக் குற்றவாளியாக நிற்க வதைத்ததே தவிர, உண்மைகள் இல்லை. சாட்சி ஆதாரம் என எங்களுக்கு எதிராக எதையுமே சமர்பிக்க முடியாதவர்கள், எங்களின் ஒப்புதல் வாக்கு மூலத்தை வைத்தே மரண நிழலில் எங்களை நிறுத்தினார்கள். அது எங்களின் ஒப்புதல் வாக்கு மூலம் அல்ல... ஒப்புக்காக வாங்கப்பட்ட வாக்கு மூலம். அதிகாரிகளின் அளவற்ற கற்பனைக் கதைகளுக்கு எங்களின் உயிர் விற்பனைப் பொருளானது.

சாட்சிகள், ஆவணங்கள், சான்றுகள் ஆகியவை இந்த வழக்குக்காகவே பொய்யாக உருவாக்கப்பட்டன. உதாரணமாக, இரண்டு சான்று குறிப்புகளைச் சுட்டிக் காட்டுகிறேன்.

கிளாட் பெர்னாண்டஸ் என்பவர் ஒரு மருத்துவர். இவர் என்னை ஒரு போதும் பார்த்தது கிடையாது. ஆனால், எனக்கு ஒரு செயற்கைப் பல்லை கட்டியதாக அவர் சாட்சியத்தில் சொல்லி இருந்தார். எனக்கு அனைத்துப்பற்களுமே நல்ல நிலையில் இருக்கின்றன. இதுவரை நான் செயற்கைப் பல் கட்டிக்கொண்டது கிடையாது. இது பற்றி மேற்படி சாட்சியிடம் எனது இயற்கைப் பல்லை காட்டி விவரமாக குறுக்கு விசாரனை செய்துள்ளேன். எம்மிடம் நீதிபதி கேள்வி கேட்ட போதும் எனக்கு அந்த மருத்துவர், பிடுங்கியதாக சொல்லும் இடத்தில் எனது இயற்கைப்பல் இருப்பதை சுட்டிகாட்டினேன். இன்றைக்கு வேண்டுமானாலும் அதிகாரிகள் என் பல்லை பரிசோதனை செய்து கொள்ளட்டும்.

திருநாவுக்கரசு என்பவர் கர்நாடகத் தடயவியல் (மருத்துவப் பிரிவில்) கல்லூரியின் போராசிரியர். இவரும் ஒரு முன்னாள் மருத்துவ இயக்குனர்தான். இவர் தனது சாட்சியத்தில் பக்கம் 41ல் (தானாக முன்வந்து) என் மனைவி நளினியை பெங்களூர் விக்டோரியா மருத்துவ மனைக்கு அதிகாரிகள் அழைத்து வந்ததாகவும்,அங்கு இறந்து கிடந்த சிவராசன், ?? ஆகியோரை நளினி அடையாளம் காட்டினார் எனவும் சாட்சியம் சொல்லி இருந்தார். பின்பு அரசுத்தரப்பு வழக்கறிஞர் மறு விசாரணையில் "இந்தப் பெண்ணைத் தான் எஸ்.ஐ.டி.யினர் விக்டோரியா மருத்து வமனைக்கு வந்து அடையாளம் காட்ட வைத்தனர்" என என் மனைவி நளினியை சுட்டிக்காட்டி நீதி மன்றத்தில் அடையாளம் காட்டினர்.




ஆனால், 9.8.91ல் இருந்து 1992 இறுதிவரை நானும் என் மனைவியும் செங்கல்பட்டு சிறையில் இருந்தோம். என் மனைவியை குறிப்பிட்ட காலத்தில் மேற்படி மருத்துவ மனைக்கு யாரும் அழைத்துப் போகவும் இல்லை; யாரையும் அடையாளம் காட்டவும் இல்லை. இதனை இந்த வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரியே குறுக்கு விசாரணையில் ஏற்றுக் கொண்டு உள்ளார். சிறையை விட்டே வெளியே வராத நளினி சிவராசன், சுபாவை அடையாளம் காட்டினார் என்றால், அதிகாரிகளின் ஜோடிப்புக்கு ஓர் அளவு இல்லையா?

ஜூனியர் விகடன்

# தமிழர் வரலாறு, கலாசாரம், பொருளாதாரம் சிதைக்கும் செயற்பாடுகளை நிறுத்தவும்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

**போருக்குப் பின்னர் இந்த அரசாங்கம் பொருளாதார, கலை, கலாசாரம், பண்பாடு, அரசியல் ரீதியாக நேர்மையாகச் செயற்படவில்லை என்பது கவலை தரும் விடயமாக இருக்கின்றது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.**

என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் கேட்டுக் கொண்டார்.

பண்டாரவன்னியனின் நினைவுதின வைபவத்தில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பண்டார வன்னியனின் வீரத்தை அந்நியர்களும் வியந்து போற்றியிருக்கின்றார்கள். அவனுடன் சண்டையிட்ட டச்சுக்காரர்கள் எத்தனையோ பேருடன் சண்டையிட்டிருக்கின்றோம். ஆனால் பண்டார வன்னியனைப் போல வீரமுடைய எவரையும் நாங்கள் போர்க்களத்தில் சந்திக்கவில்லை என தெரிவித்துள்ளதாக வரலாற்று ஆசிரியர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

அத்தகைய வீரனை நினைவுகூறும் வகையில் அவனைத் தோற்கடித்து ஆங்கிலேயரினால் நிறுவப்பட்டிருந்த நினைவுக்கல் உடைக்கப்பட்டிருப்பது வன்னி மக்கள் மனதில் பெரும் வேதனையை ஏற்படுத்தியிருக்கின்றது. சிறந்த வீரனாகிய பண்டார வன்னியனின் நினைவு தொடர்ச்சியாக நினைவு கூறப்பட்ட வேண்டும். இதற்காக உடைக்கப்பட்ட அந்த நினைவுக்கல்லைப் புதுப்பிப்பதற்காக இந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 2 இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளேன்.

பண்டார வன்னியனின் நினைவுச் சின்னம் சிதைக்கப்பட்டது மட்டுமல்லாமல் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் கலை,கலாசாரம்,பண்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் போர்க்காலத்தில் சிதைக்கப்பட்டிருக்கின்றன. 2 ஆயிரத்து 500 இந்துக் கோவில்கள் ,400 கத்தோலிக்கத் தேவாலயங்கள் அழிக்கப்பட்டிருக் கின்றன. ஆனால் போர் முடிந்து 30 மாதங்களுக்குள்ளே வடக்கு கிழக்கிலே2 ஆயிரம் பௌத்தசிலைகள் நிறுவப்பட்டு இருக்கின்றன. எனவே இத்தகைய செயற்பாடுகள் இந்த நாட்டின் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பெரும் தடையாகவே இருக்கும். எனவே போர் முடிந்த பின்பும் தமிழ் மக்களின் கலை, கலாரம், பண்பாடு, வரலாறு போன்றவற்றை சிதைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

போரினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பல வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. ஆனால் அரசாங்கம் களியாட்டங்களில் பெரும் தொகை பணத்தைச் செலவு செய்கின்றது. இரண்டு நாட்களாக வவுனியா நகரசபை மைதானத்திலும் பூங்காவிலும் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் கண்காட்சி கொண்டாட்டங்கள் என்ற பெயரில் மில்லியன் கணக்கான ரூபா நிதிசெலவு செய்யப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்ற விவசாய கண்காட்சியிலும் இதேபோன்று பெரும் தொகையான பணம் வீணாகச் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் மீள்குடியேற்றத்திற்காக சென்றுள்ள மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பணமில்லை, நிதியில்லை என அரசும் அதிகாரிகளும் கைவிரிக்கின்றனர்.

ஓமந்தைக்கு அப்பால் உள்ள மகிழங்குளம், பன்றிக்கெய்தகுளம் ஆகிய கிராமங்களில் மீள்குடியேற்றம் அனுமதிக்கப்பட்டு எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் உங்களுடைய கிராமங்களுக்குச் செல்லுங்கள் எனக் கூறி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். சொந்தக் கிரமங்களுக்கு 25 வருடங்களுக்குப் பின்னர் சென்றுள்ள அந்த மக்கள் தமது கிராம்த்திற்குச் செல்கின்ற பாதையில் அடர்ந்து வளர்ந்த காடுகளை வெட்டித் துப்புரவு செய்து போக்குவரத்திற்கு வழி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் அண்மையில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இதற்கான நிதி இல்லையென கைவிரிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் மக்களின் கண் முன்னால் இலட்சக்கான பணம் வீண் விரயம் செய்யப்படுகின்றது. இது மட்டுமல்ல வன்னியில் போரின் போது உடைப்பெடுத்த எத்தனையோ குளங்கள் இருக்கின்றன.

அவற்றை திருத்திப் புனரமைப்பதற்கு கூட நிதியில்லை என கூறுகின்றார்கள்.

போருக்குப் பின்னர் இந்த அரசாங்கம் பொருளாதார, கலை, கலாசாரம், பண்பாடு அரசியல் ரீதியாக நேர்மையாகச் செயற்படவில்லை என்பது கவலை தரும் விடயமாக இருக்கின்றது.

இந்த நிலை மாற மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் அந்த அமைப்பை மக்கள் மயப்படுத்தப்படஓர் இறுக்கமான கட்டமைப்பாக உருவாக்குவதற்கு முன் வர வேண்டும். எமக்கு இடையில் உள்ள இடைவெளிகள், கருத்துக்களை களைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு ஒன்றிணைந்து இறுக்கமாகச் செயற்பட முன் வர வேண்டும் என கேட்டுக் கொண்டார். (2)

# தெ.மேற்கு கரைக்கப்பால் வளிமண்டல தாழமுக்கம்

இலங்கையின் தென்மேற்கு கரைக்கு அப்பால் வளிமண்டலத்தில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் வானிலை பொறுப்பதிகாரி ஜயசிங்க ஆராச்சி தெரிவிக்கின்றார்.

இத்தாழமுக்கம் காரணமாகவே நேற்று முன்தினம் காலை முதல் காலநிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டு பரவலாக மழை பெய்ததாகவும் அவர் கூறினார்.

தற்போதைய காலநிலை மாற்றம் இன்று சீரடையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்த வளிமண்டல தாழமுக்கம் கடந்த 31 ஆம் திகதி முதல் உருவானதாகவும் சுட்டிக்காட்டினார்.

பிற்பகலிலோ மாலை வேளையிலோ அடுத்துவரும் சில தினங்களுக்கு இடி மின்னலுடன் பரவலாக மழை பெய்யும். சிலபிரதேசங்களில் கனத்த மழை பெய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.

இடி மின்னலுடன் மழை பெய்யும் போது அதன் பாதிப்புகளைத் தவிர்த்து கொள்வதில் ஒவ்வொருவரும் கூடிய கவனம் செலுத்துவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# அரச ஊழியர்களுக்கான வீட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

வவுனியா-வேரகம கிராமத்தில் அரச ஊழியர்களுக்கான கடனுதவியின் கீழ் 100 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது.

வேரகம கிராமத்தில் அரச ஊழியர்களுக்கான வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஐந்து இலட்ச ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர குறிப்பிட்டார்.

அரச வங்கிகளுடன் இணைந்து இந்த கடனுதவி வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

அரச ஊழியர்களுக்கு கடனுதவிகளை மாத்திரம் வழங்காது தொழில்நுட்ப ரீதியான உதவிகளும் வழங்கப்படும் என அதிகார சபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் இந்த வீடமைப்பு திட்டத்தை எதிர்வரும் 6 மாதங்களில் நிறைவு செய்து மக்களின் பாவனைக்காக வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அதேபோன்று யுத்த காலப் பகுதியில் தமது இருப்பிடங்களை இழந்தவர்களுக்காக வவுனியா பிரதேசத்திலும் வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர மேலும் குறிப்பிட்டார். (2)

# சட்டபூர்வ இணையத்தளங்களை முடக்குதல் - உரிமை மீறல்

## அமெரிக்கா அறிவிப்பு

இலங்கையில் இணையத்தளங்கள் முடக்கப்படும் சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான வகையில் தகவல்களை வெளியிட்டு வந்த லங்கா ஈ நியூஸ் என்ற இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டபூர்வமாக எந்தவொரு இணையத் தளத்தை முடக்கக் கூடாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் கோரியுள்ளது.

இலங்கைத் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு நிறுவனங்கள் இணையத்தளங்களை முடக்கக் கூடாது என தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் அமெரிக்கத் தூதரகம் எந்தவொரு தனிப்பட்ட ஊடக அமைப்பிற்காகவும் குரல் கொடுக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கு ஊடக சுதந்திரம் மிகவும் அவசியமானது என அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

கருத்து சுதந்திரம் இணைய செய்தி ஊடகங்களை பார்வையிடும் உரிமை அடிப்படை உரிமைகளில் ஒன்று எனவும் இதனை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஜப்பான் விமான நிலையத்தில் இலங்கையர் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்களை கடத்திச் செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜப்பானிய பெயன்களை சந்தேகநபர் பயணப் பொதியில் மறைத்து வைத்து வெளிநாட்டிற்கு கடத்தி செல்ல முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் ஹொங்கொங் நோக்கி பயணிப்பதற்கு முற்பட்ட சந்தர்ப்பத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

இதேவேளை சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இந்தியாவிற்கு கடத்த முற்பட்ட ஒருவர் விமானநிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா அபராதத் தொகையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது. (2)

# அ.க.மொழிகள் திணைக்களத்தால் மொழி பெயர்ப்பாளர் குழாம் ஸ்தாபிப்பு

(கொழும்பு)

மொழிபெயர்ப்பாளர்களின் குழாம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 150 மொழிப் பெயர்ப்பாளர்கள் இந்தக் குழாமில் உள்ளடக்கப்படவுள்ளனர்.

மொழிப் பெயர்ப்பாளர்கள் பற்றாக்குறைக்கு குறுகியதுல் தீர்வாக இந்த குழாம் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பல்வேறு விடயங்களுக்காக மொழிப் பெயர்ப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார். பகுதி அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர்கள் அரசதிணைக்களங்களில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையின் பின்னர் அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரமசிங்க தெரிவித்தார். (2)

# பகிடிவதையினை நிறுத்துவது தொடர்பில் பல்கலை.நிர்வாகம்-அமைச்சு முறுகல்

(கொழும்பு)

பகிடிவதைகளை நிறுத்துவதற்கு போதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் போதிய ஒத்துழைப்பு வழங்காததால் உயர்கல்வி அமைச்சுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

களனி பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களும் அடுத்த தவணைக்கான மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். புதிய மாணவர்கள் பலவகையான பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக குற்றம் சுமத்தப்படும் பல சம்பவங்கள் தொடர்பான அறிக்கைகள் உள்ளன.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் பகிடிவதைகள் இடம்பெறுவதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து தனக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக உயர் கல்வி அமைச்சின் மாணவர்கள் விவகார பணிப்பாளர் நாயகம் கீர்த்தி மாவல்லகே கூறினார்.

எனினும் பல்கலைக்கழக நிர்வாகம் ஒத்துழைக்காததால் இம்முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந் நிலையில் விசாரணைக்காக வேறு வழிகளைப் பயன்படுத்தவுள்ளதாகவும் பகிடிவதை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக காணப்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (2)

# முறையான அரசியல் ஏற்படும் வரை அரசியலில் இறங்க காத்திருப்பேன்

## பாரதவின் மகள் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உரிய அரசியல் கலாசாரம் உருவாகினால் அரசியலில் களமிறங்கத் தயார் என அண்மையில் கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தந்தை உயிரிழந்து சில காலம் கடந்துள்ள நிலையில் நான் அரசியலில் பிரவேசிப்பதாக வெளியான தகவல்களினால் சிலர் பதற்றமடைந்துள்ளனர்.

குறித்த நபர்கள் எனக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

தந்தையின் மரணத்தை விற்பனை செய்ய முயற்சிப்பதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர்.

சேறு பூசல்களுக்கு அஞ்சப் போவதில்லை. இன்று அரசியல் மிகவும் இழிவான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் சரியான அரசியல் கலாசாரம் உருவாகும் வரையில் காத்திருப்பேன். ஐந்து ஆண்டுகளில், பத்து ஆண்டுகளில் உருவாகக் கூடும். அதுவரையில் காத்திருந்து அரசியலில் களமிறங்குவேன்.

தந்தையின் மறைவினால் தாய் நோய்வாய்ப்பட்டுள்ளார் என ஹிருனிகா சிங்கள பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (2)

# சிறையில் கைதி தற்கொலை

பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட கைதி வெலிமடப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைதி மூன்று கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இருந்தவர். இவரது கொலை தொடர்பாக நேற்று தீர்ப்பு வழங்கபட இருந்த நிலையில் நேற்று முன்தினம் சிறைச்சாலைக்குள் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2)

# சட்டத்தை அனைவரும் கையிலெடுப்பதால் குற்றச்செயல்கள் தற்போது அதிகரிப்பு

## கொழும்பு பேராயர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அனைத்து துறைகளையும் சேர்ந்தவர்கள் சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொண்டுள்ளதால் அண்மைக்காலமாக நாட்டில் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பான செய்திகளை கேட்க முடிந்துள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பொலிஸ்- அரசியல்வாதிகள் மாத்திரமல்லாது மக்களும் சட்டத்தை தமது கையில் எடுத்துள்ளனர் என தெரிவித்துள்ள அவர் இது மிகவும் அபாயகரமான நிலைமை எனவும் இதன்மூலம் மக்கள் மத்தியில் அதிருப்தியான மனநிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

சட்டமும் அமைதியும் அனைவருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். பொலிஸார் பக்கசார்பின்றி தமது கடமைகளை செய்வார்களேயானால் விரும்பத்தகாத செய்திகளை கேட்க வேண்டிய தேவை இருக்காது எனவும் மெல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார். (2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதியறிக்கை பகிரங்கப்படுத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையானது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும்.

அதாவது இறுதி அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டதும் அது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையானது பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும். இதனை ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளார். அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டதும் அது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கூறுமா? என்று கேட்கப்படுகின்றது. ஆனால், நாங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளிவரும் வரை காத்திருக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும் முன்னர் அதனை விமர்சிப்பதோ அதனைப் பற்றி பேசுவதோ முறையான விடயமல்ல.

எது எவ்வாறு இருப்பினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது கேள்விகளுக்கு பதில் அளிப்பதாக அமையும் என்று நம்புகின்றோம். (2)

# தொடர்மழை நிலையும்; இடம்பெயர்ந்தோர் படும்பாடும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, யாழ்.மாவட்டங்களில் பெய்து வரும் பருவ மழை காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளதுடன் வீதிகளும் சேதமடைந்துள்ளன.

பருவ மழை காரணமாக மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். குறிப்பாக நலன்புரி முகாம்களில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ள கிளிநொச்சி, யாழ். மாவட்ட மக்களுக்கு உரிய முறையில் தகரங்கள் மற்றும் தற்காலிக கொட்டகைகள் வழங்கப்படாமையால் மழை வெள்ளம் அவர்கள் குடியிருப்புக்களுக்குள் சென்றுள்ளது.

இவ் வெள்ளம் குளங்களுக்கு வழிந்தோடக்கூடிய கால்வாய்கள் சீர் செய்யப்படாமையினால் தேங்கியுள்ளது.

இந்த வெள்ளத்தினால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் ஒரு சில குடும்பங்கள் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கி உள்ளனர்.

பருவமழை தற்போது பெய்யத்தொடங்கியுள்ளதால் பாதிப்பு குறைவாகவே உள்ளது. அடுத்துவரும் காலங்களில் இதன் தாக்கம் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. இந்த தாக்கத்தில் இருந்து தப்புவதற்கு நிறுவனங்கள் இந்த மக்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

தற்போது பிரதான வீதிகள் மற்றும் உள்ளூர் வீதிகள் செப்பனிடுதல், அகலமாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதனால் வீதிகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டு வருகிறது. (2)

# தொடர் மழையினால் நீர்மட்டம் உயர்வு

மழையுடன்கூடிய காலநிலை காரணமாக 69 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 42 வீதம் உயர்ந்துள்ளதாக திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்யுமாயின் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிக்கக் கூடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால் ஆரம்பமாகியுள்ள பெரும்போக நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா போன்ற மாகாணங்களில் இடியுடன்கூடிய மழை பெய்துவருகின்றது. அத்துடன் கடும் காற்றும் வீசி வருவதால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

மேற்படி மாகாணங்களில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் வீதிகள் சேதமடைந்துள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலநறுவை போன்ற மாவட்டங்களின் தாழ் நிலப் பிரதேசங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளன.

இதனால் இம்மாவட்டங்களில் உள்ள மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (2)

# ஊரடங்கு தளர்வு

பிரதேசங்களில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமைதியின்மை நிலவியதால் தளர்த்தப்பட்டது. இதே வேளை அமைதியின்மை ஏற்படக்காரணமாக இருந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பெற்றோல் குண்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் நிலவிய அமைதியின்மையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார். (2)

# 72 மணித்தியாலத்திற்குள் முறைப்பாடுகளுக்கு விசாரணை

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் பொதுமக்களால் பொலிஸ் நிலையங்களில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் 72 மணித்தியாலத்திற்குள் விசாரணை மேற்கொள்ளும் புதிய செயற்திட்டமொன்றினை பொலிஸ் நிலையங்களில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் மூலம் கிடைக்கப் பெறும் சாதாரண முறைப்பாடுகளைக் கூட விசாரணை செய்வதற்குத் தாமதம் ஏற்படுவதாகவும் அதன் காரணமாக பெருமளவிலான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் தேங்கிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்வதற்காக புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்படும் முறைப்பாடுகளை நடமாடும் சேவைகள் மூலம் மற்றும் புதிய முறைகள் மூலமும் தீர்த்து வைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்த அவர் இப்புதிய திட்டம் தொடர்பில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (2)

## சீனாவில் எய்ட்ஸ் அதிகரிப்பு

சீனாவில் கடந்த ஏழு மாதங்களில் மட்டும் பல இலட்சக்கணக்கான மக்கள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இதையடுத்து அந்நாட்டில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 4 இலட்சத்து 29 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

சீனாவில் நேற்று முன்தினம் நடந்த ஐ.நா. எய்ட்ஸ் அமைப்பு மற்றும் சீன சுகாதாரத் துறை கூட்டத்தில் பேசிய சுகாதாரத்துறை அமைச்சர் சென் ஷூவூ கூறுகையில்,

கடந்த 1980 இருந்து சீனாவில் ஒரு இலட்சத்து 64 ஆயிரம் பேர் எய்ட்சால் பாதிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் 86 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். கடந்த சில ஆண்டுகளாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர் பதிவு செய்வது குறைந்துள்ளது. எனினும் எய்ட்ஸ் நோய் பரவல் மற்றும் அதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகமாவது கவலை அளிக்கிறது என்றார். (2)

## பாக்.-ஆப்கானிஸ்தான் தலைவர்களின் பேச்சுவார்த்தை துருக்கியில் ஆரம்பம்



பதற்றத்தை தணிக்க பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் தலைவர்கள் பேச்சுவார்த்தை துருக்கியில் தொடங்கியது. ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் அல் கொய்தா தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. அவை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு வெளியேற உள்ளன.

இந்த நிலையில் பாகிஸ்தான் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த பின்லேடன் கொல்லப்பட்டதை தொடர்ந்து அங்கு மீண்டும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்தன. பாகிஸ்தானின் ஹக்கானி தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க படைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் கடந்த செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி தலைமை சமரச காதருமான் புர்கானுதீன் ரப்பானி தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.

இதற்கு பாகிஸ்தான் உளவுத்துறையின் சதியே காரணம் என ஆப்கானிஸ்தான் கருதுகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு பாதிக்கப்பட்டு பதற்றம் நிலவுகிறது.

எனவே அயல் நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தை தணிக்க சமரச பேச்சுவார்த்தைக்கு துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல் ஏற்பாடு செய்திருந்தார். அதற்கான பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

அதில் பங்கேற்ற பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப்அலி சர்தாரி, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் மற்றும் இரு நாட்டு இராணுவ தளபதிகள் மற்றும் பாகிஸ்தான் இராணுவ தலைமை தளபதி அஷ்பாப் பர்வேஷ் கயானி, ஆப்கானிஸ்தான் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் ஷெல் முகமது கரீமி ஆகியோர் சந்தித்து பேசினார்கள். அவர்களது பேச்சுவார்த்தை விபரம் வெளிப்படவில்லை. அதேநேரத்தில் பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடந்தது என பாகிஸ்தான் உள்துறை மந்திரி ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இன்று இஸ்தான்புல்லில் உள்ள சிறப்புமிக்க ஒட்டோமான் காலத்து சிராகன் அரண்மனையில் தலைவர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடக்கிறது. அதில் ஆசிப் அலி சர்தாரியும் ஹமீத் கர்சாயும் கலந்து கொள்கின்றனர். இப்பேச்சுவார்த்தையில் ஆசிய கண்டத்தில் உள்ள சீனா, இந்தியா, துருக்கி உள்ளிட்ட 14 நாடுகளின் தூதர்களும் பங்கேற்பார்கள் என தெரிகிறது. முக்கியமாக இதில் அயல் நாடான இந்தியா பங்கு பெற வேண்டும் என பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஹீனா ரப்பானிகர் கோரிக்கை விடுத்துள்ளார். (2)



குவைத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட இங்கிலாந்து இளவரசர் சார்ள்சை அந்நாட்டு எரிசக்தித்துறை அமைச்சர் ஓசுலிவான் குவைத் நகர் சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்பதை படத்தில் காணலாம்.




## கிர்கிஸ்தான் மனாஸ் விமான நிலையத்தின் அமெரிக்க இராணுவத்தளம் மூடப்படும்

கிர்கிஸ்தானில் அமெரிக்க இராணுவத் தளம் மூடப்படும் என புதிய ஜனாதிபதி அறிவித்துள்ளார். சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்த கிர்கிஸ்தான் நாட்டில் சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது.

அதில் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் அல்மெஷ்பெக் அதாம்யேவ் வெற்றி பெற்றார். இதை தொடர்ந்து அவர் பிஷ்கெக் நகரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

கிர்கிஸ்தானில் மனாஸ் விமான நிலையத்தில் அமெரிக்க இராணுவ தளம் மூடப்படும். ஏனெனில் தற்போது ஈராக், ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் உள்ளது.

இதனால் எங்கு பதற்றம் நிலவுகின்றது. அதுபோன்று அமெரிக்காவினால் அயல் நாடான ஈரானிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அதுபோன்ற சூழ்நிலை ஒருநாள் கிர்கிஸ்தானிலும் ஏற்படும். ஆகவேதான் அமெரிக்கா இராணுவத்தளத்தை மூட திட்டமிட்டுள்ளோம்.

மனாஸ் நகரில் அமெரிக்க இராணுவ தளம் செயற்பட 2004 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தம் நீடிக்கப்படமாட்டாது என்று தெரிவித்தார். சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்த கிர்கிஸ்தான் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு மனாஸ் விமான நிலையத்தில் இராணுவதளம் அமைக்க அப்போதைய ஜனாதிபதி குர்மான் பெக் எஸ்.பாகியேவ் அனுமதி அளித்தார். அதற்காக ஆண்டுதோறும் ரூ.200 கோடி வாடகையாக பெறப்பட்டது.

இதற்கு கிர்கிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. மேலும் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்றும் கருதப்பட்டது.

எனவே அமெரிக்க இராணுவதளம் மூடப்படுவதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கிர்கிஸ்தானில் இயங்கும் ரஷ்யா இராணுவதளம் குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. (2)

## லிபியாவினுடைய ஆயுதங்கள் தொடர்பில் ஐ.நா.சபை கவனம் செலுத்துகின்றது

லிபியாவில் காணப்படும் பாரியளவிலான ஆயுதங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கொலை செய்யப்பட்ட லிபிய ஜனாதிபதி முவம்பர் கடாபியின் ஆட்சிக் காலத்தில் பெருந்தொகையான ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

கிளர்ச்சிப் படையினருக்கும் கடாபி இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களின் போது பாரியளவு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்களில் பெருந்தொகையானவை களவாடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறு களவாடப்பட்ட ஆயுதங்களை கண்டு பிடிக்க வேண்டியது லிபியாவின் புதிய ஆட்சியாளர்களின் முக்கிய கடமைகளில் ஒன்று என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

நேட்டோ கூட்டுப் படையினர் பெருமளவிலான ஆயுதங்களை அழித்துள்ளனர். எவ்வாறெனினும் எவ்வளவு தொகை ஆயுதங்கள் இன்னும் புழக்கத்தில் காணப்படுகின்றது என்பது இன்னமும் மதிப்பீடு செய்யப்படவில்லை.

விமானங்தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசாங்கம் சர்வதேச அதிகாரிகளுடன் இணைந்து இரசாயன ஆயுதங்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையில் ரஷ்யா தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானம் ஏகமனதாக உறுப்பு நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்புட்டுள்ளது.

ஆயுதங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக அல்கொய்தா உள்ளிட்ட தீவிரவாத இயக்கங்கள் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடும் எனவும் இவ்வாறு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் பாரியளவில் அழிவுகள் ஏற்படக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2)

## தினசரி உடற்பயிற்சியினால் தகுந்த உடல் எடையை பெற்ற ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்தது. அவர் அதிக அளவில் சிகரெட் பிடித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதம் டாக்டர் ஜெப்ரி குல்மான் அவருக்கு உடல்நல பரிசோதனை நடத்தினார். அப்போது அதிக அளவில் சிகரெட் பிடிப்பது அவரது உடல் நலத்துக்கு உகந்தது அல்ல. எனவே சிகரெட் பிடிப்பதை குறைக்க வேண்டும் என் ஆலோசனைகளை வழங்கினார்.

ஆனால் ஒபாமா அந்த பழக்கத்தை விடவில்லை. இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு பெப்ரவரியில் மீண்டும் உடல் பரிசோதனை நடத்தினார். அப்போதும் இதையே வலியுறுத்தினார்.

இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் தனது 50 ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். இதை தொடர்ந்து அவரது நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டது. தனது உடல் நலத்தில் அக்கறை எடுத்துக் கொண்டார். சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விட்டார்.

இந்த தகவலை அவரது டாக்டர் ஜெப்ரி குல்கான் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் ஒபாமாவுக்கு உடல் பரிசோதனை செய்தேன். தற்போது அவர் 95 சதவீதம் சிகரெட் பிடிப்பதை நிறுத்திவிட்டார். வயதுக்கு தகுந்த உடல் எடை உள்ளது. தினசரி உடற்பயிற்சி செய்வதால் அதிக அளவில் இருந்த கொழும்புச்சத்து குறைந்துள்ளது. மொத்தத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதி பணியை செய்யும் முழு தகுதியுடன் அவர் இருக்கிறார் என்று நற்சான்றிதழ் அளித்துள்ளார். (2)

# கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

## புலமைப்பரிசில் பாராட்டு விழா-2011

## சிறப்பு மலர் - 03.11.2011



2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுடன்

### மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து...



2011ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவுப் பாடசாலையில் இருந்து 14 மாணவர்கள் சித்தியெய்தியதைப் பாராட்டுகின்றேன். இங்கு 178 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் ஒருவர் மூன்றாம் இடத்தைப் பெற்றமை மேலும் பாராட்டிற்குரியது.

ஆரம்பப்பிரிவு தனியலகாகப் பிரிக்கப்பட்டு தனியான அதிபர், ஆசிரியர் குழாம் உருவாக்கப்பட்ட பின் இப்பெறு பேறு கிடைத்துள்ளது. பாடசாலை அதிபர் திருமதி கா.சிவ கரனும் அவரோடு குடும்பமாக இயங்கும் ஆசிரியர் குழாமும் அளித்து வரும் பூரண ஒத்துழைப்பும் பாராட்டுதலின் பின்புற உந்து சக்தியாக அமைந்துள்ளது.

பாடசாலைப் பரீட்சைகள் வகையில் தரம் 5 பரீட்சை மிக மிக கடினமானது. அவர்களது வயது, குடும்பப்பின்னணி என்பன மிக முக்கியமானது இந்நிலையில் இப்பாடசாலையின் அதிபரும் ஆசிரியர்களும் விசேடமாகத் தரம் 5 இற்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களும் மிக்க கடினமாகச் செயற்பட்டு இவ் வெற்றியைத் தேடித்தந்துள்ளனர்.

புதிதாக ஆரம்பப்பிரிவு உருவாக்கப்பட்ட முதலாம் வருடத்திலேயே இவ் வெற்றிச் சாதனையை அவர்களால் பெறமுடிந்ததென்றால் மறுவருடங்களில் இவர்கள் பாரிய சாதனையைப் படைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவ் வெற்றிக்கு காரணமான மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் பின்புலமாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த பெற்றோரையும் மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

கல்வி கரையில கற்பவர் நாட்சில
ப.அரியரத்தினம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி-முல்லைத்தீவு.

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



கிளிநொச்சி மத்திய கல்லூரி இசுறு செயற்றிட்டத்தில் இணைக்கப்பட்டதன் விளைவு, எமது மாவட்டத்திற்கென கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் உதயமாகியது.

2011 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப் பரிசில் தேர்வில் மாவட்ட நிலை மூன்றை இப்பள்ளி மாணவன் பெற்றுள்ளான். வெட்டுப்புள்ளிக்கு மேலே 14 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 71 % ஆனோர் இத் தேர்வில் [illegible] பெற்றுள்ளனர். இம்மாணவச் செல்வங்களை உளம் நிறைந்த நிலையில் எனது பாராட்டுக்களையும் நல்வாழ்த் துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2011

| | |
|---|---|
| இடம் | :-கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் |
| காலம் | :- 03.11.2011 வியாழக்கிழமை |
| நேரம் | :-10.30 மணி |

**முதன்மை விருந்தினர்**
**திரு.ப.அரியரட்ணம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி, முல்லைத்தீவு.

**சிறப்பு விருந்தினர்**
**திரு.சி.கணேசலிங்கம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
(ஆரம்பக் கல்வி)
வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி.

**திரு. க.இரத்தினகுமார்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
(கல்வி அபிவிருத்தி)
வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி.

**திரு. அ.அமிர்தலிங்கம்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர், கரைச்சி,
கிளிநொச்சி.

**திரு. எஸ்.கலிஸ்ரஸ்**
திட்ட அலுவலர், சிறுவர் பாதுகாப்பு நிதியம்,
கிளிநொச்சி.

**எமது மாணவச் செல்வங்களை வாழ்த்துவதுடன் நிகழ்வினைக் கண்டு களிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

இம்மாணவச் செல்வங்களின் கல்வி அடைவு மேம்பாட்டிற்காக உழைத்த அதிபர், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள், தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். தரம் 5 இற்கு முதன்மை ஆசிரியராக செயற்பட்ட திரு. ப.சசிறதன் அவர்களை மிகவும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் கல்விப் புகழ் மென்மேலும் ஓங்கி உயர்ந்திட எல்லாம் வல்ல இறைவனிடம் ஆசி வேண்டி இறைஞ்சுகின்றோம்.

திரு.க.முருகவேல்,
வலயக்கல்விப் பணிப்பாளர் ,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

**பாடசாலைச் சமூகம்**

### உதவிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மகுடம் சூடும் மத்திய ஆரம்ப வித்தியாலயம் கிளிநொச்சிநகரின்ஏ9 நெடுஞ்சாலையில் புதுப் பொலிவுடன் புதுப் பிறப்பெடுத்திடும் மத்திய ஆரம்ப வித்தியாலயம் மழலைகளின் மகிழ்விடமாக மாறுவது மனங்கொள்ளத்தக்கது. இதற்கு அடித்தளமாக வலுப்பெற்று மிளிர்கிறது இவ்வாண்டு வெளிவந்த தரம் 5 புலமைப் பரிசில் தேர்வு முடிவுகள்.

பாடசாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் பிரதி உபகாரத்தினை எதிர்பாராது தன்னலமற்ற சேவை மனப்பாங்குடன் பணி செய்த ஆசிரியர்களைப் பாராட்டுகின்றேன். குறிப்பாக கல்வியியற் கல்லூரி தேசிய டிப்ளோமா பட்டம் பெற்ற திரு ப. சசிறதன் ஆசிரியரின் மகத்தான பணியினைச் சுட்டிக் காட்டுகின்றேன். இவருடன் இணைந்து பணி செய்த ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

மீள் குடியேற்றத்தின் பின்னரும் அதற்கு முன்னரும் பலத்த உள நெருடலுக்கு உட்பட்ட மாணவச் செல்வங்கள் அதிலிருந்து மீட்சி பெற்று கல்வியில் பலர் வீறு நடைபோடத் தொடங்கியுள்ளனர். இவர்கள் மேலும் உயர் தகைமைகளைப் பெற்றிட வாழ்த்துகின்றேன். கிளிநொச்சி நகரத்தில் தனித்துவமான ஆரம்பப் பாடசாலையாக கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் புகழ் பரப்ப எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நல்லாசிகள் பொழிகின்றேன்.

திரு சி.கணேசலிங்கம்,
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

### அதிபரின் வாழ்த்துரை



2011ஆம் ஆண்டு தைத்திங்கள் 03 ஆம் திகதியிலிருந்து மத்திய கல்லூரியிலிருந்து பிரிந்து கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் எனும் பெயருடன் இயங்கிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை 2011ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல்14 மாணவர்கள் சித்தியடைந்ததையிட்டு நான் பெருமகிழ்வடைவதோடு அம்மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.

மேலும் மாவட்ட நிலையில் எமது மாணவன் ஒருவன் 178 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் நிலையிலுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் எமது பாடசாலை தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இரண்டாம் நிலையிலுள்ளதும் பாராட்டுதலுக்குரிய ஒரு விடயமாகும். தரம் -05 கற்பித்த ஆசிரியர்கள், உதவியாக இருந்த பகுதித் தலைவர்கள், ஏனைய ஆசிரியர்கள்,பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாடசாலையின் நன்றிகள். "கல்வியே கண்" என்ற மகுட வாசகத்திற்கு அமைவாக பார்வைக்கு கண்போல அறிவுக்கு கல்வி என்பதனையும் இங்கு வலியுறுத்துகின்றேன்.

திருமதி கா.சிவகரன்
அதிபர், கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தை மீது தான் பெரும்பாலான ராஜ்சியங்கள் அழிந்தன.
-ஜங்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இங்கோ தந்தையின் தலைபோகிறது அங்கோ தனயர்கள் உண்டு மகிழ்கிறார்

தந்தை செல்வநாயகத்தின் சிலை உடைக்கப்பட்டதான தகவல் அறிந்து வேதனை கொள்ளாத தமிழ் மக்கள் இருக்க முடியாது.

தமிழ் மக்கள் தங்களின் உரிமைக்காகப்பாடு பட்ட தலைவருக்கு சிலை எழுப்பி மரியாதைப் படுத்துவது கூட முடியாத காரியமென் பதையே சிலை உடைக்கப்பட்ட சம்பவம் சுட்டி நிற்கின்றது.

சிலை உடைக்கப்பட்ட சம்பவம் ஒரு விடயத்தை எங்களுக்கு உணர்த்தி நிற்பதையும், நாம் உணர்ந்து கொள்வது அவசியம்.

அதாவது தமிழ் இனம் தனது உரிமையை பெற்றுக்கொள்ளாதவரை எதனையுமே தன்னுடையது என்று உரிமை கோரமுடியாது.

எனவே உரிமையைப் பெற்றுக்கொள்ள முதலில் அதற்கான வியூகத்தை அமைத்துக் கொள் என்பதே அதுவாகும்.

எனினும் தமிழ் அரசியல் தலைமைகள் தங்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் உயிர் போனபோது கூட நாங்கள் எங்கள் சுயலாபத்தை தியாகம் செய்யத் துணிந்திலோம்.

இப்போது தந்தை செல்வநாயகத்தின் சிலையின் தலை போயுள்ளது. நாளை என்ன நடக்கும் என்று எமக்குத் தெரியாத வகையில் தென்பகுதி அரசியல் புகுந்து விளையாடுகின்றது. ஆனால் நாங்கள் உலக நாடுகளுக்குச் சென்று உணவருந்தி மகிழும் அநாகரிகச் செயலில் ஈடுபடுகின்றோம்.

கூடவே கூடியிருந்து உண்பதற்குப் பணமும் வாங்கும் பாழ்பட்ட புதுப் பண்பாடும் அறிமுகமாகியுள்ளது. என்னே கொடுமை!

இந்திய–பாகிஸ்தான் எல்லைப் பகுதியான கார்கிலில் போர் நடந்தபோது, இந்திய கிரிக்கெட் வீரர்களும் உதைபந்தாட்ட வீரர்களும் இணைந்து உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்தினர்.

கார்கில் போரில் உயிர்த் தியாகம் செய்த படையினரின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காகவே அந்தப் போட்டி ஏற்பாடு.

இலட்சோபலட்சம் பார்வையாளர்கள். அந்த நிகழ்வில் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த வாஜ்பாயும் பங்கேற்றார்.

ஆனால் அவருக்கு ஒரு தேநீர் கூட வழங்கப்படவில்லை. ஏன் தெரியுமா? கார்கில் போர் நடக்கும் போது எனக்கு தேநீர் எதற்கு? இப்படி பிரதமர் வாஜ்பாய் கேட்பார். எனவே அதை அறவே தவிர்த்துக் கொண்டோம் என்றார்கள் ஏற்பாட்டாளர்கள்.

அட! வன்னியில் கொட்டும் மழையில் குடிசைத் தறப்பாள், தண்ணீர் நிறைந்து தாழ, தன் குழந்தை மூச்சுத் திணறுமே என்று ஏங்கும் தாய் தறப்பாள் தண்ணீர்ச் சுமையை தன் தலையில் தாங்கி கண்ணீர் விடுகிறாள்.

ஆனால் அங்கோ, எங்கள் புள்ளடியில் வெற்றி பெற்றவர்கள் கூடியிருந்து கோழிக் கறியென்றால் கனடாவுக்குத் தான் வரவேண்டும் என்று சுவைத்து மகிழ்கிறார்கள். வாழ்க தமிழர்.

# பல்கலை.மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் பகிஷ்கரிப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மிக நீண்ட காலமாக பல்கலைக் கழகங்களின் ஊழியர்கள் எதிர்நோக்கும் சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி கடந்த ஜுலை மாதம் முதல் சகல பல்கலைக்கழகங்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட போதனை சாரா ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதில் ஒரு கட்டமாக சுவரொட்டிப் போராட்டங்களை கடந்த ஜுலை மாதம் 11, 12 ஆம் திகதிகளிலும் பொதுக் கூட்டத்தை கடந்த 7 ஆம் மாதம் 19 ஆம் திகதியும் மேற்கொண்டனர்.

இதுதவிர உயர் கல்வி அமைச்சின் முன்பு பிக்கெட்டில் போராட்டத்தையும் கடந்த 8 ஆம் மாதம் 4 ஆம் திகதி மேற்கொண்ட பின்னர் உயர் கல்வி அமைச்சின் செயலாளர், சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட்ட உத்தேச சம்பளத் திட்டத்தை தயாரித்து வழங்குமாறு தொழிற்சங்க கூட்டக் குழுவை கேட்டுக் கொண்டார்.

இதற்கமைய கூட்டக் குழுவினால் உத்தேச சம்பளத் திட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பின்பு உத்தேச சம்பளத் திட்டத்தை உயர் கல்வி அமைச்சு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கையளித்தது.

இருப்பினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதற்கு எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதனால் கடந்த ஜுலை மாதம் 9 ஆம் திகதி சகல பல்கலைக்கழகங்களிலும் ஊழியர்கள் பிக்கெட்டில் போராட்டமும் ஜுலை மாதம் 12 ஆம் திகதி ஒரு நாள் சுகவீன விடுப்புப் போராட்டமும் மேற்கொண்டனர்.

இதன் பின்னர் சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழு, திறைசேரி, உயர் கல்வி அமைச்சு, பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் தொழிற்சங்க கூட்டக் குழுவின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலிற்கு வந்திருந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், உத்தேச சம்பளத் திட்டம் குறித்து எத்தகைய கருத்தையும் வெளியிடவில்லை.

இதனால் அவர்களுக்கு இருவார கால அவகாசமும் அதன் பின்னர் திறைசேரி அதிகாரிகளுக்கு இருவார கால அவகாசமும் வழங்குவதென சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழு தீர்மானித்தது.

இதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் தமது சார்பில் வேறொரு சம்பள திருத்தமொன்றை சமர்ப்பித்தனர். அத்தோடு உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

ஆனால் தொழிற்சங்க கூட்டக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச சம்பளத் திட்டத்தைப் பற்றியோ, தமது அதிகாரிகள் சமர்ப்பித்த திட்டத்தைப் பற்றியோ தமது கருத்தை வெளியிடாத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, போதனைசார ஊழியர்களின் சம்பளத்தை திருத்தியமைப்பதில் தனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்பதை மட்டுமே தெரியப்படுத்தியுள்ளது.

எனவே சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாசமும் முடிபடைந்த நிலையில் தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் இன்று (நேற்று) இந்த ஒரு நாள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர்.

இந்த பகிஷ்கரிப்பினை அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம், அனைத்து பல்கலைக்கழகங்களின் நிர்வாக உத்தியோகத்தர் சம்மேளம், துணை கல்வி சார் சங்கம், சிறிலங்கா தொழிநுட்ப உத்தியோகத்தர் சங்கம், உப விடுதிக் காப்பாளர் சங்கம், சிறிலங்கா சுதந்திர கட்சியின் தொழிற்சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளது என யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராஜா தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மீது இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு கடந்த சில நாட்களுக்கு முன்பே தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையில் சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி போதனை சாரா ஊழியர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (2-6)

## பரிசளிப்பு விழா

யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மு.விக்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, சிறப்பு விருந்தினர்களாக சட்ட ஆலோசகரும் ஏஏஏ மூவிஸ் நிர்வாகியுமான க.செவ்வேள், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், யாழ். வலய கணித உதவிக் கல்விப் பணிப்பாளரும் த.தொ.தொழில் நுட்ப இணைப்பாளருமான எஸ்.வி.மகேந்திரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயக கட்சி கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஐங்கரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

ஐந்து போத்தல் கோடாவை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார், குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (2-3)

## காணி உரிமைகளும் சட்ட விதிகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் காணி உரிமைகளும் உரிய சட்ட அமுலாக்க விதிகளும் எனும் தலைப்பிலான கருத்தமர்வு எதிர்வரும் 5, 6ம் திகதிகளில் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிள்ளையார் இன் ஹோட்டலில் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் வளவாளராக முன்னாள் கிழக்கு மாகாண உதவிக் காணி ஆணையாளர் எஸ். குருநாதன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 30 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (2,3,134)

## நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்தை சேர்ந்த பாடசாலைகளின் தொகை மதிப்பீடு கணனி தரவேற்ற செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை, பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைக்குமாறு நல்லூர் கோட்ட பணிப்பாளர் சி. மாணிக்கராசா கேட்டுள்ளார். (பா-11)

## சத்திய தரிசனம்



### கோபத்துக்கு அடிமையாகாதே

சாதாரண குடத்திலும் தூய்மையான தண்ணீர் வைக்கலாம். அதுபோல் சாதாரணமானவர்களுக்கும் மனதில் தூய எண்ணங்களை வளர்த்துக்கொண்டால் இறைவனை அணுக முடியும்.


இறைவனை வெளியே தேட வேண்டாம். அவர் நமக்குள்ளேயே இருக்கின்றார்.

கோபம் நம்மை ஆட்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சாந்தம் தெய்வீகமானது. கோபம் மிருக சுபாவத்தை காட்டுவது. எனவே கோபத்துக்கு அடிமையாகக் கூடாது

வாழ்க்கையை சத்திய சோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம், வாக்கு, செயல் மூன்றிலும் அதை கடைப்பிடியுங்கள். அமைதியும் செல்வமும் தானே உங்களை வந்து அடையும்.

தனி மனிதனின் ஒழுக்கமும் கட்டுப்பாடுமே சமூகத்தை உருவாக்குகிறது. சமூகத்தின் ஒற்றுமையும் கட்டுப்பாடுமே நாட்டின் பலத்தை உருவாக்குகிறது. இதை அடைவதற்கு தர்ம நெறியில் வாழக் கற்றுக் கொடுக்கும் மதத்தின் மீது நம்பிக்கை வைத்து வாழ ஒவ்வொவரும் முன்வர வேண்டும்.

# இந்தியா- பாகிஸ்தான் உறவு பற்றி மன்மோகன் சிங்-யூசுப் ரசா சந்திப்பு



(புதுடில்லி)

மாலைதீவில் அடுத்த வாரம் சார்க் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தான் பிரமதர் யூசுப்ரசா கிலானியை சந்திக்க உள்ளார்.

கடந்த வாரம் மோசமான வானிலை காரணமாக 4 இந்திய இராணுவ வீரர்களுடன் சென்ற ஹெலிகொப்டர் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நுழைந்தது. இதனையடுத்து இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து மத்திய அரசு எடுத்த முயற்சிகளின் பேரில் அன்றே ஹெலிகொப்பருடன் வீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இது பல தரப்பிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இந் நிலையில் மாலைதீவில் 17 ஆவது சார்க் மாநாடு எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி மற்றும் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானியும் கலந்து கொள்கின்றனர். மாநாட்டின் இடையே பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியை சந்திக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அப்போது இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இந்த சந்திப்பு குறித்து அரசு அதிகாரிகள் கூறுகையில், மாநாட்டின் இடையே இரு நாட்டு பிரதமர்களும் சந்தித்து பேச உள்ளனர். சந்திப்பின் போது இருதரப்பு உறவுகள் குறித்து பேசப்படும் என்றும் இந்த சந்திப்பு நடைபெறும் திகதி குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருவதாகவும் கூறினார். இந்த மாநாட்டின் போது இருநாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர்களும் சந்தித்து பேச வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாட்டு தலைவர்களும் சந்திப்பதை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற தூண்டுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி மொகாலியில் நடந்த உலகக்கோப்பை அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதிய போது பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பின் பேரில் கிலானி மொகாலி வந்து போட்டியை பார்த்த பின்னர் மன்மோகன் சிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பின்னர் தற்போது 2 ஆவது முறையாக சந்திப்பு நடைபெறவுள்ளது.

சார்க் மாநாட்டின் போது சார்க் அமைப்பில் இடம்பெற்றுள்ள உறுப்பு நாடுகளான ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூட்டான் உள்ளிட்ட 8 நாடுகளின் தலைவர்களை சந்தித்து பேசுவார் என தெரிகிறது. (2)

## ஆந்திராவில் தொற்றுநோய்; 50 பேர் உயிரிழப்பு

ஆந்திராவின் கம்மாம் மாவட்டத்தில் வைரஸ் காய்ச்சி, மலேரியா, டெங்கு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு கடந்த 2 மாதங்களில் சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாவட்டத்தில் இது போன்ற காய்ச்சலால் நாள் ஒன்றுக்கு சராசரியாக ஒருவர் வீதம் உயிரிழப்பு ஏற்படுகிறது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இரத்த அணுக்களின் எண்ணிக்கை குறைவு காரணமாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒக்டோபர் 20 ஆம் திகதி வரை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு டெங்கு காய்ச்சலுக்கான எலிசா சோதனை செய்யப்படவில்லை என தெரியவந்துள்ளது. கடந்த 20 ஆம் திகதிக்கு மேல் 10 நாட்களில் சுமார் 25 இற்கும் அதிகமானோருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. காய்ச்சல் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளுக்கும் அரசு மருத்துவமனைகளில் எலிசா சோதனை நடத்த ஆந்திர அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

# பாரதச் செய்திகள்

## பல வழிகளில் இந்தியாவுக்கு தொல்லை கொடுக்கிறது சீனா


பாகிஸ்தானைத் தொடர்ந்து சீனாவும் இந்தியாவுக்கு பல வழிகளில் தொல்லை கொடுத்து வருகின்றது. அருணாசலப் பிரதேசத்தை சொந்தம் கொண்டாடியது. ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை.

சீனாவில் விரட்டப்பட்ட திபெத் புத்தமத துறவி தலாய்லாமாவுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்து இருப்பதும் அந்த நாட்டுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

எல்லைப் பிரச்சினையை காரணம் காட்டி கடந்த 1962 இல் சீனா இந்தியா மீது போர் தொடுத்தது. அப்போதைய பிரதமர் நேரு இதை சமாளித்தார். அதன் பின்னர் அடிக்கடி இந்திய எல்லைப் பகுதியில் சீனப்படைகள் அத்துமீறி ஊடுருவ முயற்சி செய்து வருகின்றது. குறிப்பாக காஷ்மீரின் லடாக் பகுதியிலும் உத்தரகாண்ட் இமயமலை பகுதியிலும் சீனா ஊடுருவல் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

ஆக்கிரமிப்பு காஷ்மீரின் பாகிஸ்தானுக்காக வீதி இடும் பணியை சீனா மேற்கொண்டு வருகின்றது. இதேபோல அந்தமான் தீவுகளை குறிவைத்து வங்கக்கடல் மற்றும் இந்திய பெரும் கடல் பகுதிகளிலும் சீன கப்பல்களின் இரகசிய நடமாட்டத்தை சமீபத்தில் இந்திய கடற்படை கண்டுபிடித்தது.

சீனாவில் இந்த அத்துமீறல்கள் பற்றி இந்திய இராணுவ தளபதிகளின் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இதில் சீன எல்லைப்பகுதியில் ஒரு இலட்சம் வீரர்களை குவிக்க முடிவு செய்யப்பட்டது. அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு



இலட்சம் வீரர்கள் படிப்படியாக எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக இராணுவ வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

முதலில் லடாக் பகுதியிலும் ஜார்க்கண்ட் எல்லையிலும் வீரர்கள் நிறுத்தப்படுவார்கள். ஏனைய இடங்களில் படிப்படியாக வீரர்கள் குவிக்கப்படவுள்ளனர். சீன எல்லையில் 4 பிரிவுகளில் வீரர்கள் குவிக்கப்படுவார்கள். அதற்காகவும் இந்திய இராணுவத்தை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக கூடுதலாக ரூ.64 ஆயிரம் கோடி நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் ரஷ்யாவும் தங்கள் பாதுகாப்பை விட அரசியல் குறிக்கோள்களுக்காக விண்கலங்களை ஏவுகின்றன.

இதுபோன்ற அசகாய செயல்கள் வேண்டுமா அல்லது நாட்டின் பாதுகாப்பு முக்கியமா என்பதை சீனா முடிவு செய்ய வேண்டும். மக்களின் வாழ்க்கைக்கு தான் சீனா முக்கியத்துவம் அளிக்க வேண்டும். (2)

## சீமான் வருகைதர இருந்த நிகழ்விற்கு எதிர்ப்புடன் திரண்டோர் கைது

மார்த்தாண்டத்தில் சீமான் கலந்து கொள்ள விருந்த நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து திரண்ட காங்கிரஸ் கட்சியினர் 170 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் குமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்த தினம். அதனையொட்டி மார்ஷல் நேசமணிக்கு வீரவணக்க நிகழ்ச்சி நடத்த நாம் தமிழர் கடைசி ஏற்பாடு செய்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் மார்த்தாண்டம் காந்தி மைதானத்தில் திரண்டனர்.

கிள்ளியூர் தொகுதி எம்.எல்.ஏ.ஜான் ஜேக்கப் உட்பட பலர் சீமானுக்கு எதிராக கோஷமிட்டபடி இருந்தனர். அப்பகுதியில் மக்கள் திரண்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து பொலிஸார் அங்கே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தனர்.

இந்நிலையில் நிகழ்ச்சி நடப்பதாக இருந்த திருமண மண்டபத்தின் முன்வைக்கப்பட்டிருந்த பிளக்ஸ் போர்டு மீது சிலர் செருப்புக்களை வீசினர். பொலிஸார் போராட்டக்காரர்களை கலைந்து செல்ல அறிவுறுத்தினர். ஆனால் பொலிஸ் ஆய்வாளர் மீதும் கூட்டத்தினர் முட்டைகளை வீசினர்.

இதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட ஜான் ஜேக்கப் எம்.எல். ஏ. உட்பட 170 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் பொலிஸார் பாதுகாப்போடு கூட்டம் நடைபெற்றது. (2)

## கனிமொழிக்கு இன்று பிணை தி.மு.க.வினர் டில்லி பயணம்

(சென்னை)

2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைதாகியுள்ள தி.மு.க. எம்.பி. கனிமொழிக்கு பிணை வழங்க சி.பி.ஐ.முடிவு செய்துள்ளது. 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைதான கனிமொழி எம்.பி. கடந்த 160 நாட்களாக டில்லி திஹார் சிறையில் உள்ளார்.

இந்த வழக்கில் முன்னாள் மத்திய மந்திரி ராசா உட்பட 17 பேர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் கனிமொழி உட்பட 7 பேர் மீதான பிணை மனுக்கள் விசாரணை தனி நீதிமன்றில் நடந்து வருகின்றது.

இதில் கனிமொழி, கலைஞர் டி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமார், குசேகான் புரூட்ஸ் அண்டு வெஜிடபிள்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர்கள் ஆசிப் பல்வா, ராஜீவ் அகர்வால், சினியுக் பிலிம்ஸ் அதிபர் கரீம் மொரானி ஆகிய 5 பேரின் பிணை மனுக்களை சி.பி.ஐ. எதிர்க்கவில்லை.

ஆனால் சுவான், டெலிகாம் அதிபர் ஷாகித் உஸ்மான் பல்வா, ஆ. ராசாவின் முன்னாள் உதவியாளர் சந்தோலியா ஆகியோரை பிணையில் விடுவதற்கு சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

முன்னதாக பிணை கேட்டு மனுதாக்கல் செய்திருந்த 7 பேரின் பிணை மனுக்கள் மீது 3 ஆம் திகதி தீர்ப்பு கூறப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளதை அடுத்து இன்று தீர்ப்பு கூறப்படுகின்றது.

சி.பி.ஐ. விளக்கத்தில் 5 பேருக்கு எதிரான அம்சங்களோ பிணை வழங்குவதை பாதிக்கும் எதிரான கருத்தோ இல்லை என்று தெரியவந்துள்ளது. எனவே கனிமொழி இன்று விடுதலை ஆவார். இதுபோல் சி.பி.ஐ. எதிர்க்காத மற்ற 4 பேரும் விடுதலை ஆவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது சி.பி.ஐ. சட்டத்தரணிகள் தங்கள் விளக்கத்தை தெளிவுப்படுத்தி விட்டதால் கனிமொழி இன்று நிச்சயம் பிணையில் விடுதலை ஆக வாய்ப்பு உள்ளது என்று சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் மத்திய மந்திரி மு.க. அழகிரி மற்றும் பொருளாளர் மு.க. ஸ்டாலின் நேற்று டில்லி சென்றுள்ளனர். டி.ஆர்.பாலு, எம்.பி. வசந்தி, ஸ்டாலின் உட்பட அனைத்து தி.மு.க. எம்.பி.க்கள், முன்னாள் அமைச்சர் பூங்கோதை உட்பட பலர் டில்லி செல்கிறார்கள். (2)



ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட தினவிழாவை முன்னிட்டு ஐதராபாத் நகரில் உள்ள என்.டி.ஆர். மைதானத்தில் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலாசார நிகழ்வினைப் படத்தில் காணலாம்.

# சூதாட்ட புகாரில் குற்றம் நிரூபிக்கப்பட்ட பாகிஸ்தான் வீரர்களுக்கு இன்று சிறை



கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்கள் சல்மான்பட், முகமட் ஆசிப், முகமட் அமீருக்குரிய தண்டனை விவரம் இன்று வெளியாகின்றது. தீர்ப்புக்குப் பின் இவர்கள் சிறையில் அடைக்கப்படுவர்.

கடந்த ஆண்டு நடந்த லோர்ட்ஸ் டெஸ்டில் பாகிஸ்தான் அணியின் அப்போதைய அணித்தலைவர் சல்மான்பட் (27) வேகப்பந்து வீச்சாளர்கள் முகமெட் ஆசிப் (28) முகமட் அமிர் (19) ஆகியோர் ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டு பிடிபட்டனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் சல்மான் பட் (10 ஆண்டு) முகமெட் ஆசிப் (7ஆண்டு) முகமெட் அமிர் (5 ஆண்டு) ஆகியோருக்கு போட்டியில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

**குற்றம் நிரூபணம்**

இந்த மூன்று வீரர்கள் மீதும் சதி செய்து ஏமாற்றுதல், இலஞ்சப் பணம் பெறுதல் போன்ற பிரிவுகளில் லண்டனில் உள்ள சவுத்வோர்க் கிரவுன் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. குற்றத்தை ஒத்துக்கொண்ட முகமெட் அமீரிடம் விசாரணை நடக்கவில்லை.

**இன்று ஜெயில்**

மற்ற இருவரும் குற்றவாளிகள் என விசாரணைக்குழு தீர்ப்பு வழங்கியது. இதில் முகமெட் ஆசிப் மீதான இலஞ்சப்பணம் பெறுதல் குற்றச்சாட்டு மட்டும் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இவர்களுக்குரிய தண்டனை விவரம் இன்று வெளியாகிறது.

இதில் இரு பிரிவுகள் குற்றம் நிரூபிக்கப்பட்ட சல்மான் பட்டிற்கு ஏழு ஆண்டு, முகமெட் ஆசிப்பிற்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும். குற்றத்தை முன்னதாகவே ஒத்துக்கொண்ட முகமெட் அமிருக்கு குறைந்தளவிலான தண்டனை கிடைக்கும் எனத் தெரிகிறது.

**பத்திரிகைக்கு பாராட்டு**

இது குறித்து லண்டன் புலனாய்வு தலைமை அத்தியட்சகர் மாட் ஹார்ன் கூறுகையில், இதுபோன்ற தீர்ப்புகளால் வீரர்கள் உண்மையான உணர்வுடன் போராடுவார்கள். இந்த சூதாட்டத்தை வெளியே கொண்டு வர உதவிய தி நியூஸ் ஒப் தி வேர்ல்ட் பத்திரிகையின் செயல் பாராட்டத்தக்கது என்றார்.

**மகிழ்ச்சியாக உள்ளது**

ஸ்பெஷல் கிரைம், பயங்கரவாதி பிரிவு மூத்த சட்டத்தரணி சல்லி வால்ஷ் கூறியதாவது;

மக்கள் பணம் கொடுத்து கிரிக்கெட் போட்டிகளை பார்ப்பதை பொழுதுபோக்கு மற்றும் தொழிலாக வைத்துள்ளனர். தாங்கள் பார்ப்பது உண்மையான போட்டியா இல்லையா என்பதெல்லாம் அவர்களுக்கு தெரியாது.

ஆனால் பாகிஸ்தானின் மூன்று வீரர்களும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திட்டமிட்டு செயல்பட்டுள்ளனர். இதனால் தான் இந்த வழக்கு சூதாட்டம் என்று மட்டும் எடுத்துக் கொள்ளாமல் கிரைம் பிரிவில் நடத்தப்பட்டது. தவறு நடந்ததை ஆதாரத்துடன் உறுதி செய்து தீர்ப்பு தந்தது மகிழ்ச்சியாக உள்ளது. இவ்வாறு சல்லி வால்ஷ் கூறினார்

தீர்ப்பு குறித்து ஐ.சி.சி தலைமை அதிகாரி ஹாருண் லார்கட் கூறுகையில், பாகிஸ்தான் வீரர்கள் கிரிக்கெட்டின் விதிகளை மட்டும் மீறவில்லை. அவர்கள் இங்கிலாந்தின் சட்டத்திற்கு புறம்பாகவும் நடந்துள்ளனர். இந்த தீர்ப்பு கிரிக்கெட்டில் ஊழல் செய்ய நினைக்கும் மற்ற வீரர்களுக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது என்றார்.

**கம்ரானிடம் விசாரணை**

இந்த வழக்கின் போது பொலிஸ் தரப்பில் வாதாடிய சட்டத்தரணி அப்தாப் ஜாபர்ஜீ கூறுகையில்; சூதாட்ட சர்ச்சையில் கம்ரான் அக்மல் வகாப் ரியாஸ் ஆகியோரது நடவடிக்கைகள் மிக ஆழமாக சந்தேகத்தை ஏற்படுத்தியது என்றார்.

இதேவேளை இவர்கள் மீது விசாரணை நடத்த முடிவு செய்துள்ளதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது

# மேற்கிந்திய தீவுகள் வெற்றி

பங்களாதேஷிற்கு எதிராக டாக்காவில் நடந்த இரண்டாவது டெஸ்டில் 229 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரை 1:0 எனக் கைப்பற்றியது.சொந்த மண்ணில் சோபிக்கத் தவறிய பங்களாதேஷ் அணி ஏமாற்றம் அடைந்தது.

பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

முதல் டெஸ்ட் சமனிலையானது. இரண்டாவது டெஸ்ட் டாக்காவில் நடந்தது.

**கடின இலக்கு**

முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவுகள் 355, பங்களாதேஷ் 231 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுக்கு 383 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

பின் 508 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்கு 164 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**சகிப் அரைச்சதம்**

நேற்று ஐந்தாவதும் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. 2-வது இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (83) ஆறுதல் அளித்தார்.

பின் முஸ்பிகு ரஹீம், சகிப் அல் ஹசன் ஜோடி போராடியது. ஐந்தாவது விக்கெட்டுக்கு 88 ஓட்டங்கள் சேர்த்தபோது சகீப் (55) ஆட்டமிழந்தார். முஸ்பிகுர் ரஹீம் 69 ஓட்டங்கள் எடுத்தார்.

**பிஷ் துல்லியம்**

அடுத்துவந்த நயீம் இஸ்லாம் (03),நாசீர் ஹொசைன் (03), ஷ்வோ (0), ருபெல் ஹொசைன் (07) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 278 ஓட்டங்களுக்கு சுருண்டு 229 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந் தது.

சுழலில் அசத்திய தேவேந்திரா பிஷ் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 1:0 என கைப்பற்றியது. ஆட்டநாயகன் விருதை கிர்க் எட்வேர்ட்ஸ் தட்டிச் சென்றார்.

தொடர்நாயகன் விருது பங்களாதேஷ் வீரர் சகீப் அல்ஹசனுக்கு வழங்கப்பட்டது.

## நாட்டை அழிக்கும்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அன்று எமது நாட்டு மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டிருந்தது. வாகனமொன்றில் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாகச் செல்ல முடியாது. மாணவர்களுக்கு பாடசாலைக்குச் செல்ல முடியாது. எங்கும் அச்சமான சூழ்நிலை. நிச்சயமற்றதொரு உயிர் வாழ்க்கை. இவ்வாறான நிலைமையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இல்லாதொழித்து மக்கள் நிம்மதியாக வாழும் அமைதிச் சூழலை உருவாக்கியுள்ளார்.

பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்பும் பணியில் ஜனாதிபதி தலைமையிலான அரசு ஈடுபட்டு வருகிறது.

மக்களின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதில் அடிப்படை வசதிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே தான் நகரம் கிராமம் என்ற பேதமின்றி அடிப்படை வசதிகள் செய்து கொடுக் கப்படுகின்றன. நாட்டு மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

அரசாங்கம் அனைத்து தரப்பினரையும் கருத்தில் கொண்டே அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எனவே முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (பா)

## கூட்டமைப்பினர்...

வரவேற்கவுள்ளனர்.

லண்டனில் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்சிநிரல் ஒன்றை கூட்டமைப்பின் பிரித்தானியக் கிளை தயாரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதில் பிரித்தானியா அரசியல் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை எதிர்வரும் 7ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

அத்துடன், அன்று மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று இரவு இலங்கை திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## இலங்கைக்கு ஆதரவாக...

அதன் தரம் தாழ்ந்த விடயமாகவும் உள்ளது.

2009-ல் இடம் பெற்ற பொதுநலவாய அமைப்புத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இலங்கையில் 2011 ல் இம் மாநாட்டை வைப்பது என்கின்ற தீர்மானம் பிற்போடப்பட்டு 2013 ல் மேற்கொள்வவென த் தீர்மானிக்கப்பட்டது.

2009ஆண்டிலிருந்த இலங்கையின் நிலைப்பாட்டில் தற்போது சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான அனைத்துலகின் கவனம் தற்போது அதிகரித்துள்ளது. ஆனால் இதனை ஏற்று இக் குற்றச்சாட்டுத் தொடர்பாக நேர்மையான நீதியான முயற்சிகளை எடுப்பதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கம் இதனை ஏற்க மறுத்துள்ளது.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட வல்லுனர் குழு இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் விவகாரங்கள் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பெறப்பட்ட நம்பகத்தன்மையான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு சுயாதீனமான அனைத்துலக விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

இது தொடர்பாக இலங்கையின் உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் விசாரணை முயற்சிகள் போதி யளவு நம்பகத்தன்மையான ாக இல்லாமையாலேயே இவ்வாறான அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எது எவ்வாறிருப்பினும மிகப் பரவலாக இலங்கை அரசாங்கம் மீது முன் வைக்கப்பட்ட குற்றச்சாட் டுக்களை கருத்திலெடுக்கின்ற விடயத்தில் பொதுநலவாய அமைப்பு பராமுகமாக நடந்துக்கொண்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளில் சில தமது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளன.

2013ல் இடம்பெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை இலங்கையில் வைப்பதற்கு அனுமதித்தமை இலங்கை இவ்வமைப்பின் உறுப்பு நாடாக தொடர்ந்தும் நிலைத்திருக்க அனுமதி யளித்தமை போன்ற விடயங்களின் மூலம் பொதுநலவாய அமைப் பானது தனது எதிர்காலப் போக்கை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுநலவாய அமைப்பு தனது வரலாற்றில் தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக தனது எதிர்ப்பைக் காட்டியது போன்று இனிவருங்காலங்களில் மனித உரிமைச் செயற் பாட்டில் தான் எவ்வாறான தீர்வுகளை எடுக்கவுள்ளதை தற்போதைய பேர்த் மாநாட்டில் இலங்கை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் வெளிப்படையாக அறிவித்துள்ளது.(பா)

## கரந்தெனிய...

பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கரந்தெனியவில் மருத்துவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்து சந்தேக நபர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் மீது நேற்று முன்தினம் பொது மக்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனால் பிரதேசத்தில் பதற்ற நிலைமை நிலவியது. பதற்றத்தைக் தணிப்பதற்கு விசேட அதிரடிப் படை மற்றும் இராணுவத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.

மருத்துவர் ஒருவரும் இராணுவ கப்டன் ஒருவரும் கூட்டாக இணைந்து திட்டமிட்டு படைமுகாமில் கடமையாற்றி வரும் படை வீரர்கள் இருவரைக் கொண்டு படுகொலையை செய்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## போர்குற்ற...

மீறிவரும் நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் இலங்கை கனடாவின் தொடர்ச்சியான கண்டனங்களுக்கு உள்ளாகி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகளைக் காப்பதற்கும் முன்னெடுப்பதற்குமான மூன்றாவது குழுநிலை விவாதம் கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற போது, ஐக்கிய நாடுகள் சபைக்கான கனடாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி குய்ல்லர்மோ ஈ. றிச்சின்ஸ்கி இலங்கை விவகாரம் குறித்து தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இதுவரை கவனம் கொள்ளப்படவில்லை என்பது கனடாவின் கரிசனையாக உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் ;இலங்கையில் இடம் பெற்ற போரின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமைகள் சட்டங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் குறித்து ஒரு சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். (பா)

## துமிந்த சில்வாவுக்கு...

மருத்துவர்கள், தாதிகள் அடங்கிய குழுவென்றும் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பிய பின்னர் கடந்த திங்கட்கிழமை சிறிஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்குச் சென்று துமிந்த சில்வாவை பார்வையிட்டிருந்தார்.

துமிந்த சில்வாவுக்கு சிகிச்சை வழங்குதவதற்காக அவரை சிங்கப்பூர், அமெரிக்கா அல்லது பிரித்தானியாவுக்கு கொண்டு செல்லவுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு இவருக்கு சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்த நிலையிலேயே இவர் அங்கு கொண்டு செல்லப்படுவதாக கூறப்படுகிறது.

சிறிஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் மருத்துவர்கள் துமிந்த சில்வாவை விடுவிக்க தயாராக இல்லாத போதிலும் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பெயரிலேயே அவரை விடுவித்துள்ளனர்.

இதனிடையே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரவின் கொலையுடன் துமிந்த சில்வாவுக்கு நேரடி தொடர்புள்ளதாக சாட்சியங்கள் உள்ள போதிலும் அவரை வெளிநாட்டுக்கு கொண்டு செல்வதற்கு நீதிமன்ற அனுமதி பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## இந்தியா எம...

கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரை அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் சந்திக்காமை வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பை ஏற்க முடியாது. இலங்கையின் தேசிய பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேசாது சர்வதேசம் அரசாங்கத்துடனேயே பேச வேண்டும்.

சர்வதேச அழுத்தங்களின் போது இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவுகிறது. எனவே அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளின் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் வெற்றியைப் பெற்றத் தரப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.(பா)

# TILKO JAFFNA CITY HOTEL

70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbâque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...



மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive



மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே



மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134





## பதவி வெற்றிடம்

- ஓவ்செற் இயந்திர இயக்குநர் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

தூர இடங்களில் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் தங்குமிட வசதி, உணவு வசதி என்பனவும் வழங்கப்படும்.

நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்
வலம்புரி,
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



## யாழ் மாவட்டத்தில் சிங்கள மொழிப் போதனையில் ஓர் புதிய புரட்சி

மாதாந்தம் 1850/- ரூபா கட்டணத்துடன் முதன் முறையாக 'லங்காதீப', TNL வானொலியின் சிங்கள ஊடகவியலாளர் திருமதி K.K. றனி அவர்களினால் நடாத்தப்படும்

சிங்களக் கற்கை நெறி TKY SN

(புறஜெக்டர் மூலம் Audio, Video வசதியுடன் மாணவர்கள், தொழில்புரிவோர் உட்பட அனைவருக்கும் உகந்தது.)

உள்ளடக்கங்கள்:
- அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பேச்சு சிங்களம்
- சிங்கள எழுத்துக்கள், சொற்கள், வசனங்கள்
- இலக்கிய நயம் மிக்க சிங்களப் பாடல்கள், கவிதைகள், கதைகள்

ஆரம்பம்: 05.11.2011 சனிக்கிழமை காலை 11.00
காலம்: மூன்று மாதம்
(ஒரு பிரிவில் 25 பேர் மாத்திரமே. பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்)



**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 491 4527, 021 221 9016
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

(பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோஸ் - சங்கானை,
தரன் ரேடஸ் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
JET STEELE(PVT)LTD , OLD MOOR STREET COLOMBO-12
உரிமையாளர்)



சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று புதன்கிழமை (02.11.2011) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை (05.11.2011) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்

T.P.: 021 225 0510, 021 321 1019

# சனல் 4 கொலைக்...

ஊடகவியலாளர்கள், ஏனை யோருக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கலென்ரே போன்றோருக்கு இலங்கையைக் களங்கப்படுத்த வேண்டு மென்பதே ஒரே நோக்க மாகவுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபத்தின் தசதெச நிகழ்ச்சியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (பா)

# முன்னாள் போராளிகளின்...

அவசியமானது. முன்னாள் போராளிகள் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு ஆதரவளிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக முன்னாள் போராளிகள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்க எதிர்பார்க்கின்றோம் எனத்தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு முதல் சுவதேசகுடிபெயர்வு அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை சமூகத்துடன்மீள இணைக்கும் நடவடிக்கை களைமேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனிதாபிமானப்பு மற்றும் நீண்ட கால சமாதானத்தை அடிப்படையாகக்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச குடிபெயர்வு அமைப்பு அறிவித்துள்ளது.

மூவயிரம்முன்னாள் போராளிகளுக்கு ஏற்கெனவே நேரடியாக உதவிகள் வழக்கப்பட்டுள்ளதாகக் குறித்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் நோர்வே தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)


கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்

சங்கானை
# றோயல்அக்கடமி

A/L 2012,13 கலை, வர்த்தகப் பிரிவுகள்

கலைப் பிரிவுகள்
- தமிழ் பத்மநாதன்
- புவியியல் பாபு
- இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
- நாடகஅரங்கியலும் றமேஸ்
- பொருளியல் வரதராஜன்
- அளவையியல் E.S.பவன்
- அரசியல் சுகாஷ்
- வரலாறு R.S.சந்திரன்

ஆரம்பம் 05 Nov 2011

வர்த்தகப்பிரிவுகள் நடைபெறுகின்றன
- பொருளியல் வரதராஜன்
- வணிகக்கல்வி முரளி
- கணக்கீடு பகீரதன்
- ஆங்கிலம் மதன்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.